ஸ்ரீமுக ௵] SEPTEMBER 1933 [ஆவணி ௴.

ஸ்ரீ

வைதிக மத தீபிகை

ஸம்புடம் 1

ஸஞ்சிகை 3

PUBLISHED BY

SRI SADVIDYA SABHA

SAIDAPET, MADRAS.

T-UN-53

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸர்வமத வினவிடை:—[ஸ்ரீ உப.வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி வி. ஆர். நரஸிம்ஹாசார்யர்] ... 59
2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்[ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்] 66
3. ஸ்ரீ ராமாவதார மஹிமை:—[ப்ரஹ்மஸ்ரீ எ. நடராஜ ஐயர். 75
4. ஆதார ஆதேயங்கள்:—[ஸ்ரீ. உப. எஸ். கிருஷ்ணமாசாரியர்] 79
5. புஸ்தக விமர்சம் 82
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 83
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்;— [ஸ்ரீ. உப. ஸ்ரீ.வாஸுதேவாசார்யர்] 321

ஸ்ரீ:

விஜ்ஞாபநம்.

1. ஸ்ரீ வைதிக மத தீபிகைக்குச் சந்தாதாரர்களாய்ச் சேர்வதற்கு இஷ்டம் இருக்கின்றதா என்பதை நமது ஸுஹ்ருத்துக்கள் உடனே தெரிவிக்க தயவு செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

2. இதுவரையில் சந்தாவைச் செலுத்தாமல் இருக்கும் சந்தாதாரர்கள் கூடிய சீக்கிரத்தில் தமது சந்தாவைச் செலுத்துவார்களென்று நம்புகிறோம். வி. பி. வழியாக ஸஞ்சிகைகளைப் பெற்றுக்கொண்டு சந்தாவைச் செலுத்துவது வீணான அதிகச் செலவுக்குக் காரணமாகுமாதலால், மணி ஆர்டர் வழியாகவே சந்தாவை அனுப்ப சந்தாதாரர்கள் தயவு செய்யவேண்டும்.

3. தீபிகையைப்பற்றிய ஸகல கடிதங்களும், மணி ஆர்டர்களும் கீழ்க் கண்டிருக்கும் விலாஸத்திற்கே அனுப்பவேண்டும்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்,
கோட்கிஸ் கார்டென்ஸ், ரங்க ஐயர் தெரு,
கீழ மாம்பலம், தேனம்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வைதிக மத தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 1.] ஸ்ரீமுக ௵ ஆவணி ௴ [ஸஞ்சிகை 3.

ஸ்ரீ:

ஸர்வமத வினு விடை

வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி

V. R. நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 2 பக்கம் 35)

கோபாலன் :—அண்ணு! இதுவரை நீங்கள் சொல்லியதிலிருந்து எங்களுக்கு இவ்வுண்மை விளங்குகிறது. சமயிகளெல்லோரும் ஆத்ம விசாரணையைத் தான் ஆரம்பிக்கின்றுர்கள். ஆனல் சிலர் பிரத்யக்ஷ மொன்றையே ப்ரமாணமாகக்கொண்டு விசாரிக்கப் புகுந்து, அதற்குப் புலப்பட்ட ஒரு ஸ்தூலத்தையே ஆத்மாவென்று தீர்மானித்து, அதன் க்ஷேமலாபங்களுக்கு உற்ற சட்டதிட்டங்களையே தமது ஸித்தாந்தமாகக் கைக்கொண்டு நின்றுவிட்டனர். மற்

றுஞ் சிலரோவெனில்: ப்ரத்யக்ஷத்திற்கும் மேற்பட்ட ஏதோ அபூர்வ ப்ரமாணத்தைக் கண்டுபிடித்து, அதனுதவியைக் கொண்டு அதிஸூக்ஷ்மமான அகப்பொருளொன்றையே ஆத்மாவென்று நிச்சயித்து, அதற்கேற்ற க்ஷேமலாபங்களையும் அவற்றை ஸாதித்துக் கொள்ளும் உபாயம் முதலானவற்றையும்பற்றிய நிர்ணயம் வரைக்கும் தயங்காமல் சென்று, அத்தீர்மானத்தைத் தமது ஸித்தாந்தமாக வெளியிடலாயினர். இவ்வளவைக் கொண்டுதான் நாஸ்திகர் ஆஸ்திகர் என்று இருவகையான பிரிவு ஏற்படலாயிற்று. இது சரிதானே?

பலராம்:—ஆமாம்; சரியாகவேதான் க்ரஹித்திருக்கின்றாய்.

கோபால்:—அண்ணா! இதற்குமேல் எனக்குச் சில சங்கைகள் உண்டாகின்றன. அவை யுக்தமோ அயுக்தமோ எப்படியிருந்தாலும் பொறுத்துக் கேட்டு, அவற்றைப் பரிஹரித்துத் தரவேண்டும்.

பலராம்:—ஸங்கோசமேன்? தாராளமாய்க் கேள். தகுந்தபடி விடை யளிக்கின்றேன்.

கோபால்:—மற்றவர் தேடிக் கண்ட அவ்வபூர்வ ப்ரமாணத்தை நாஸ்திகர் மாத்திரம் ஏன்தான் காணமற் போயினர்? அவர்களுக்கு மதிநுட்பம் அவ்வளவில்லை யென்று சொல்வதா? அவர்களிடையே பெரிய பெரிய மேதாவிகள் பலர் இருக்கின்றனராமே. அவர்களுக்கு அந்த ப்ரமாணம் கிடைத்திருந்தால் மற்றவர்களைப் போல ப்ரமேயத்தையும் ஒரு மாதிரியாக அங்கீகரித்திருப்பார்கள் அன்றோ? இது ஒரு ஸந்தேகம். இது நிற்க: இன்னுமொரு ஸம்சயமுமுண்டு. அதென்னவெனில்: அவ்வபூர்வ ப்ரமாண மொன்றைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிற ஆஸ்திகர்களுக்குள்ளேயும் ஆயிரம் பிரிவு தோன்றியிருக்கின்றதே? அதற்குத்தான் காரணமென்ன? இவ்விரண்டு சங்கைகளையும் களைந்து தரவேண்டும்.

பலராம்:—தம்பீ! முதன் முதலில் நாஸ்திகரைப்பற்றி வினவியதற்கு விடை கூறுகின்றேன் கேள். ஆஸ்திகரைவிட அவர்கள் அறிவிற் குறைந்தவரென்று கூறுவது பேதைமை யாகும். அப்படியிருக்க, அவர்கள் ஏன் ஆரம்பத்திலேயே நின்றுவிட்டன ரென்பதற்கும் தக்க காரண மிருக்கின்றது. அவர்கள் ஆஸ்திகர்களைப் பார்த்து 'ஸஹோதரர்களே! இந்த ஸ்தூலத்தைவிட ஏதோ அதிஸூக்ஷ்மமான அழிவற்ற நித்தியமான ஆத்ம தத்வம் வேறொன்று இருக்கிற தென்கிறீர்களே; அதனை எந்த ப்ரமாணத்தைக்கொண்டு கண்டுபிடித்தீர்கள்?' என்றொரு கேள்வி கேட்டார்கள். அதற்கு ஆஸ்திகர்களுள் சிலர்,

'சாஸ்த்ரஞ் சொல்லுகிறது' என்ருர்கள். வேறு சிலர் ' யுக்தியினுல் கண்டுபிடித்தோம்' என்ருர்கள். மற்றுஞ் சிலர் 'எங்கள் பெரியவர் சொல்லிவைத்தார்' என்ருர்கள். இப்படிப் பலபடியாகச் சொல்லிய தில் ஒன்றேனும் நாஸ்திகருக்கு த்ருப்தி யளிப்பதாயில்லை. ஏனெனில்: ஒரு பொருள் எப்பொழுதும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கே புலப்படவில்லையென்றுவிட்டால் அதைப்பற்றி யுக்தியினுலொன்றும் ஸாதித்துவிட முடியாது. அதுபோலவே அது விஷயமாக வார்த்தையை அளந்தளந்து பேசுவதிலும் பயனென்று மில்லை. ஒரு நாளும் கண்டறியமுடியாத பொருளைப்பற்றிய ஊஹமும் சொல் லும் குயுக்தியும் வம்பாகத்தானே முடியும்? முக்காலத்திலுங் காணலாகாதென்ருல் அதனை ஒரு பொருளென்று கொள்வதற்கே இடமில்லையே. குதிரைக் கொம்பு போன்றதுதானே அது என்று நினைத்துவிட்டார்கள் நாஸ்திகர்கள். ஆதலால் அவர்கள் ப்ரத்யக்ஷத் திற்கு மேற்பட்டதொரு பிரமாண மிருப்பதைப்பற்றியாவது அந்த பிரமாணத்தி னுதவியால் அறியக்கூடிய ப்ரமேயத்தைப் பற்றியாவது கவலையற்றவ ராயினர்.

இனி ஆஸ்திகரைப்பற்றிக் கேட்டதற்குப் பதில் உரைக்கின் றேன் கேள். இவர்கள் முறையே சாஸ்த்ரம், யுக்தி, பெரியோர், ஆகிய மூன்றைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன ரென்று முன்னமே பிரித்துச் சொல்லியிருக்கின்றே னல்லவா? அதில் கேவல யுக்திவாதி களைத் தள்ளிவிடுவோம். ஏனெனில்: அவர்கள் மண் குதிரையைக் கொண்டு ஆறு கடக்கப் பார்க்கும் கதையாக ஊற்றுக்கு நிற்காத யுக்திகளையே சரணடைந்து கிடக்கின்றனர். சாஸ்த்ரத்தையும் பெரியோரையும் ஸாக்ஷியாகக் கோரினவர்களுடைய அந்தரங்க மென்னவெனில், அவர்கள் கேவலம் சொல்லென்று மாத்திரம் அவற் றிற்கு மதிப்பைக் கொடுத்துவிடவில்லை. மற்றென்னவெனில்: அச் சொற்கள், வஸ்துக்களைக் கண்ணாரக் கண்டவர் சொல்லியவை யென் கிற காரணத்தைக் கொண்டுதான் அவற்றை ஆதரிக்கின்ருர்கள். அந் தக் கண்ணென்றது இவ்வெளிக் கண் அல்ல; ஞானக் கண்ணெ ன்ப்படுகிற மனக் கண்தான். இக்கண்ணையோக முறையினுல் மலர்த் திப் பார்க்கும் வரையில் பொறுமைகொள்ள மாட்டாமல் புறக் கணித்துவிட்டு, புறக்கண்ணிற்குத் தோன்ருவிடில் அது ஒரு பொருளையல்ல வென்று நாஸ்திகர் ஓங்கி யடித்துவிட்டார்கள். தம்பீ! இதை விசாரிக்கப் புகுந்தால், விஷயம் வரையறை யில் லாமல் விரியும். ஆதலால் இம்மட்டில் நிறுத்திவைத்து ப்ரக்ரு தத்தை நாடுவோம்.

ஆஸ்திகருக்குள்ளாகப் பல பிரிவுக ளுண்டாகியதற்குக் காரண மென்ன வென்பதை உனக்குச் சொல்லுகிறேன் கேள். ஆஸ்திக ஸித்தாந்தங்கள் யாவும் ஸ்தூலமான இந்தச் சரீராதிகளைவிட வேறு பட்ட அதிஸூக்ஷ்மமான ஆத்ம தத்வமொன்று தனியாகவுளது என்கிறவரையில் ஒன்று பட்டிருந்தாலும், 'அவ்வாத்மாவின் ஸ்வ ரூபமென்ன? அதன் ஸ்வபாவமென்ன? அது பெறவேண்டிய பய னெது? அதைப் பெறுவதற்கான ஸாதநமெது?' என்கிற விடங் களில் அவைகள் பலவாருகப் பிரிந்துபோகின்றன வென்பதில் ஸந் தேகமே யில்லை. கண்மூடித்தனமாக எல்லா மொன்றேதா னென்று மழுப்பிவிடுவது மூடமத்யஸ்தம். ஸித்தாந்தங்கள் பிரிவுபட்டுத் தோன்றுவதுதான் ஸஹஜம். ஏனெனில்: தத்வங்கள் பலவாருகத் தோன்றுவதற்கு ஏராளமான காரணங்க ளிருக்கின்றன.

கோபால்:—அண்ணு! தத்வமென்பது வஸ்துக்களின் தன்மை தானே. இனி: பொருள் ஒரே விதமாயிருக்க, அது பலவிதமாக எப்படித் தோன்றும்? அல்லது ஒரு பொருள் ஒருவருக்கு ஒருவிதமா யும் மற்ருெருவருக்கு வேறுவிதமாயும் தோன்றுகிறதென்று வைத் துக்கொள்வோம். அப்போது ஒன்றைச் சரியான தோற்றமென்று ஏற்றுக்கொண்டு, மற்ருென்றை விபரீதத் தோற்றமென்று தள்ளி விடுகிருேம். சங்கை நல்ல கண்ணுள்ளவன் வெண்மை என்கிருன். காமாலைக்காரன் மஞ்ச ளென்கிருன். இதில் வெண்மை யென் றதை ஒப்புக்கொண்டு மஞ்சளென்றதை மாருட்டமென்று தள்ளி விடுகின்ருே மல்லவா? இந்த நியாயத்தின்படி பார்த்தால், மத ஸித் தாந்தங்களுள் ஏதேனு மொன்றைத்தான் நல்லதென்று கொள்ள லாம். மற்றவைகளை யெல்லாம் வீண் மலைப்பென்றுதானே தள்ள வேண்டிவரும். அவ்வொன்றும் எந்த ஒன்று என்பதைக்கூட சொல் வது அரிது. ஆகவே எல்லாம் குழப்பமாகிவிடும்போ லிருக்கிறதே. இதற்குக் கதியென்ன?

பலராம்:—தம்பி! நீ ஆரம்பத்தில் ஒரு தவருன வழியில் புகுந்து விட்டாய். ஆதலால் இடம் பெறமாட்டாமல் தடுமாறுகின்ருய். முதன் முதலில் அத்தவற்றைத் திருத்திக்கொள். பிறகு எல்லாம் சரிப்பட்டுவிடும். நீ என்ன நினைத்திருக்கின்ருய் என்ருல், 'சமயி கள் ஏதேனும் ஒரு வஸ்துவைப்பற்றித் தமது ஸித்தாந்தத்தை வெளியிட்டால், அதற்கு அப்பொரு ளொன்றுதான் பூர்ண ஜவாப் தாரியா யிருக்கவேண்டும்; இனி, பொருள் ஒருவிதமா யிருக்க ஸித்தாந்தம் பலவிதமானுல் அவைகள் உண்மைக்கு மாருன அப ஸித்தாந்தங்கள்தான்.' இப்படித்தானே நீ நினைத்திருக்கிறது? இது

சரியல்ல. ஏனெனில்: ஒரு நிரூபகர் ஏதேனுமொரு பொருளைப் பற்றிய ஸித்தாந்தத்தைச் செய்வதற்கு அப்பொருள்மட்டும் தனிக் காரணமல்ல. பிறிதென்னவெனில்: ப்ரமாதா (அதாவது: அப் பொருளைப்பற்றி யாதேனுமொரு தீர்மாநத்தை நல்லதென்றோ தீயதென்றோ செய்துவைக்க முன்வந்த புருஷன்), ப்ரமாணம் (அதாவது: அம்மனிதன் எதைக்கொண்டு அப்பொருளை அப்படி உணர்கின்றானோ அந்த உணர்விற்கு உபகரணமான கருவிகள்), ப்ர மேயம் (அப்பொருள்), ப்ரமிதி (அதன் உணர்வு), இந்நான்கும் ஒன்று கூடியேதான் பொருட்களைப்பற்றிய உண்மைக்குக் காரண மாகின்றது; அதாவது பொருட்களுக்கு உருவத்தை யளிக்கின்றது. எனவே, வஸ்துக்களின் வேற்றுமையால் ஸித்தாந்தங்கள் வேறு படுவனபோல, வஸ்து ஒன்றேயானாலும் மற்ற ப்ரமாதா, ப்ரமாணம், ப்ரமிதி, என்ற மூன்றின் வேற்றுமையாலும் ஸித்தாந்தங்கள் வேற் றுமை பெறுகின்றன.

கோபால்:—அண்ணா! இவ்விஷயத்தை ஏதேனும் திருஷ்டாந் தத்தைக் காட்டி நன்றாக விளங்கும்படி செய்யுங்கள்.

பலராம்:—தம்பீ! முதன் முதலில் ப்ரமாதாவான புருஷனுக் குத் தக்கபடி ஸித்தாந்தம் வேறுபடு மென்றதற்கு ஒரு திருஷ்டாந் தத்தைக் காட்டுகிறேன். பதுமைகள் நிர்மிப்பதில் நிபுணனான ஸ்தபதி ஒருவன், ஒருநாள் ஒரு அடி உயரமுள்ள பளிங்குக் கல்லை அல்லது ஒரு வீசை நிறையுள்ள மெழுகு உருண்டையை எடுத்துக்கொண்டான். அதன் பக்கல் தனது சிற்பத்திறமையைக் காட்ட நினைத்தான். அப்போதவன் அக்கல்லை அல்லது மெழுகு உருண்டையைப் புலியாகவோ பூனையாகவோ யானையாகவோ யாளியா கவோ எப்படிக் காட்ட விரும்பினாலும் அதற்குத் தக்கபடி செதுக் கியோ அமுக்கியோ தனது இஷ்டப்படி செய்து காட்டி விடுகிறான். அங்கு அந்தப் பிம்பம் உண்டாகியதற்கு அக்கல்லோ மெழுகோதான் காரணமென்றாலும், யானையாகவும் பூனையாகவுந் தோன்றியதற்கு அந்த ஸ்தபதிதானே நிமித்தமாகிறான். ஆனால் அங்கும் அப்பொரு ளுக்குப் பங்கேயில்லை யென்பது மட்டுமில்லை. ஏனெனில்: ஓரடிக் கல்லை ஒன்றரையடி உயரமுள்ள பிம்பமாகச் செய்வதற்கு அவன் கர்ணம் போட்டாலு மாகிறதில்லை. ஏன்? அவ்விடத்தில் அப் பொருள் தனது ஆதிக்யத்தைச் செலுத்துகிறது. இதனால் வஸ் துக்களைப்பற்றிய ஸித்தாந்தத்திற்கு அவ்வஸ்துக்களைப்போல, அந்த ஸித்தாந்தத்தைச் செய்யவந்த புருஷனுக்கும் பாகமிருக் கின்றதென்று கண்டுகொள். இனி உபகாரணங்களுக் குள்ள பங்

கையும் இவ்விடத்திலேயே சுருக்கமாகக் காட்டுகிறேன். இக் கல்லைச் செதுக்கப்புகுந்த இந்த ஸ்தபதி, இவன் கையில் உயர்ந்த உளியினுலான சலாகை என்கிற ஆயுதம் நல்லதாகக் கிடைத்திருக்கையில் எத்துணை லக்ஷணமாக அந்த ப்ரதிமைகளை செதுக்குவானே அவ்வளவு லக்ஷணமாக அத்தகைய ஆயுதங்களில் லாமல் மட்ட இரும்பினுல் தட்டிய மழுக்கச் சலாகை யொன்றை வைத்துக்கொண்டு அவன் தன்னுலும் செய்ய முடிகிறதில்லை. இதனுல் பொருள் பெயர்வழி இவ்விரண்டோடு, வஸ்துக்களின் நிர் மாணத்தில் உபகரணமும் பங்கு பெறுவது விளங்குகிறது பார். கைவேலைக்கு உளிபோல மனவேலைக்கு உபகரணங்களா யிருக்கின்ற கண் மூக்கு முதலான கரணங்களுக்குள்ள பங்கை மற்ருெரு திருஷ் டாந்தத்தில் காட்டுகிறேன். நகரவாஸிகளான நான்கு நண் பர்கள் ஒருஸமயம் கால் நடையாகத் தீர்த்த யாத்திரைக்குச் சென்ற னர். மத்தியில் ஒரு கிராமத்தில் புண்யமான புஷ்கரிணீ யொன்று இருப்பதாகக் கேள்விப்பட்டு அதில் ஸ்நானஞ் செய்யவேண்டு மென்று அதனைத் தேடியடைந்தார்கள். அது ஒரு தாமரைத் தடா கம். அதில் அழகிய செந்தாமரை மலர்கள் பல மலர்ந்து விளங்கிக் கொண்டிருந்தன. இந்நகரத்தினர் அரவிந்த மலரைப் பிறந்த நாள் தொடங்கிப் பார்த்தவர்களே யல்லர். அந்நால்வரி லொருவர் ‘அடா! என்ன அழகு புஷ்பத்திற்கு?’ என்று மலைத்து நின்றுவிட்டார். மற் ருெருவர் ‘ஒரு பூவைத்தான் கொய்து கொள்ளுவோமே’ யென்று பார்த்ததோடு நில்லாமல் குளத்தி லிறங்கிப் புஷ்பத்தைத்தைப் பறித் துக்கையில் வைத்துக்கொண்டு, ‘அடே! என்ன ஜில்லென்று ம்ருது வாயிருக்கிறது!’ என்ருர். மூன்ரும் மனிதர் ‘ஓய்! புஷ்பத்தைக் கை யில் வைத்துக்கொணடு அழகு பார்க்கின்றீரே; முகர்ந்தால் அல்ல வோ அதன் மேன்மை விளங்கும்’ என்று முகர்ந்து பார்த்துவிட்டு, ‘ஆஹா! எப்படிப்பட்ட மணம்!’ என்று வியந்தார். நான்காம் பேர் வழியோ சாப்பாட்டு ராமன். அவர் எங்குச் சென்ருலும் வாய்க்கு என்ன கிடைக்கிற தென்றே பார்ப்பது வழக்கம். ‘என்ன ஐயா! தும்பையிலும் முள்ளியிலும் தேனுக்கு மன்ருடுவோமே; இதில் மது ஆருகப் பெருகுகிறதே; இதைச் சற்று உருசிபார்த்தா லாகாதோ?’ என்று வாயில்வைத்து உறிஞ்சிவிட்டு, ‘அப்ப! அமிருதம், அமி ருதம்’ என்ருர். தம்பீ! இந்நான்கு பெயர்வழிகளுக்கும் அரவிந்த மலரைப்பற்றித் தனித்தனியான ஸித்தாந்தம் ஏற்பட்டிருக்கின்றது பார். முதல்வரைக் கேட்டால், அரவிந்தம் ஸுந்தரம் என்பதோடு அவர் தமது ஸித்தாந்தத்தை முடித்து விடுகின்ருர். இரண்டா

மவரைக் கேட்டாலோ ஸுந்தரமும் சீதம்ருதுளமும் என்கிறுர். மூன்றுமவரோ, ஸுந்தரமாய் சீதம்ருதுளமாய் நறுமணமுள்ளதாயுமிருக்கிற தென்கிறுர். நான்காமவர் இவ்வளவையும் சொல்லி, இதற்குமேல், அமுதம்போல் தெவிட்டாத தித்திப்பென்றுங் கொண்டாடுகிறுர். இப்படி இந்நால்வருக்குள் ஸித்தாந்தங்கள் வேறுபட்டிருப்பதற்குக் காரணமென்ன? உபகரணங்களான கருவிகளை உபயோகித்ததி லுள்ள தாரதம்யந்தானே. ஒருவர் கண்ணை மட்டும் உபயோகித்தார். மற்றொருவர் கண்ணோடு கையையும் நீட்டினுர். இப்படி மேன்மேலே நாஸை(மூக்கு) ரஸனை(நாக்கு) களையும் உபயோகித்ததாலன்றோ இவ்விசேஷம் தோன்றலாயிற்று? இதனுல் யாதானுமொரு பொருளை, குறைந்த ப்ரமாணத்தைக் கொண்டு பார்க்கையில் அது குறைவாகவும், அதிக ப்ரமாணங்களைக் கொண்டு ஆய்ந்து பார்க்கும்போது அதுவே அதிக விகாஸமுள்ளதாகவும் தோற்றுகிறதென்று தெளிவாகிறது பார். விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருக்கையில், மந்தமாய்த் தோற்றிய ஒரு பொருளை விளக்கை நன்முகத் தூண்டிவிட்டுப் பார்த்தால் பளிச்சென்று புதியதுபோல் பூர்ணமாகத் தோன்றவில்லையா? ஆகவே, ப்ரமாணங்கள் எவ்வளவுக் கெவ்வளவு உயர்ந்ததாகக் கிடைக்கின்றனவோ, ஸித்தாந்தங்களும் அவ்வளவுக் கவ்வளவு புஷ்டியையும் விஸ்தாரத்தையும் பெறுகின்றன.

கோபால்:—யுக்தம்தான். ஆனுல் இவ்விசேஷத்தை க்ரஹிக்க மாட்டாமல் நாஸ்திகர் அவஸரப்பட்டு ஒரு அரை குறையான முடிவிற்கு வந்துவிட்டது விரும்பத்தக்கதா யில்லை.

பலராம்:—சரிதான். இதை ஒரு குறையாகக் கருத இடமிருக்கிறதுதான். ஆனுலும் நாஸ்திகரும் அமிதமான மேதைவாய்ந்தவர்களாதலால், அவர்களுக்கு இவ்விசேஷம் அடியோடு தோன்றுமற் போய்விட்டதென்று சொல்லிவிடுவதற் கில்லை. அவர்கள் அறிந்திருக்கையிலும், வேண்டுமென்றே ஒரு லாபத்தைக் கருதி நாஸ்திக்யத்திலேயே நிலைகொண்டன ரென்பதற்கும் தக்க ஆதாரமிருக்கின்றது. இது விஷயமான விவரத்தை ஸமயம் வாய்க்கும்போது சொல்லுகிறேன்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

சேஷ சேஷி பாவம்

சென்ற ஸஞ்சிகையில் 'சரீரம்' என்னும் சப்தத்தின் பொருள் என்னவென்பதை விசாரித்தோம். 'சரீரம்' என்பதற்குப் பெரியோர்களாற் சொல்லப்பட்டுள்ள மூன்று லக்ஷணங்களுள், முதல் இரண்டு அவ்விடத்தில் விசாரிக்கப்பட்டன. இப்பொழுது மூன்றுவது லக்ஷணத்தை விசாரிக்க ஆரம்பிக்கிறேம். மூன்றுவது லக்ஷணமாவது—'ஒரு த்ரவ்யம் எப்பொழுதும் எல்லா விடங்களிலும் எல்லா அவஸ்தைகளிலும் மற்றென்றின் ப்ரயோஜநத்திற்காகவே இருந்தால், அந்த த்ரவ்யத்தை மற்றொரு த்ரவ்யத்திற்குச் சரீரமென்று சொல்லக்கூடும்' என்பதுதான். இந்த லக்ஷணம் நமது சரீரத்திற்கும் உபபந்நமாயிருக்கின்றது. நமது தேஹம், நமது ஆத்மாவின் ப்ரயோஜநத்திற்காகவே இருக்கின்றதன்றே? இம்மாதிரியே இந்த ப்ரபஞ்சம் முழுவதும் பகவானுடைய ப்ரயோஜநத்திற்காகவே இருக்கின்றதாகையால், அது அவனுக்குச் சரீரமாகின்றது. ஸம்ஸ்க்ருதத்தில் மற்றென்றின் ப்ரயோஜநத்திற்காகவே இருக்கும் த்ரவ்யத்தைச் 'சேஷம்' என்றும், ப்ரயோஜநம் பெறும் த்ரவ்யத்தைச் 'சேஷி' என்றும் சொல்வார்கள். ஆகையால் இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் எல்லாப் பொருள்களையும் பகவானுக்குச் 'சேஷ' பூதங்கள் என்றும், அந்தப் பொருள்கள் எல்லாவற்றையும் குறித்துப் பகவானைச் 'சேஷி' என்றும் சாஸ்த்ரம் சொல்லும்.

இது விஷயமாக முதல் முதலில் ஒரு ஸந்தேஹம் ஜநிக்கலாம். அதாவது—'ப்ரபஞ்சத்திலுள்ள எல்லா த்ரவ்யங்களும் பகவானுடைய ப்ரயோஜநத்திற்காகவே இருக்கின்றன என்பது எப்படிக் கூடும்? அறிவற்ற அசேதநங்களான த்ரவ்யங்களுக்கு ஸ்வப்ரயோஜநம் என்பது இல்லையாகையால் அவை மற்றென்றின் ப்ரயோஜநத்திற்காக இருக்கின்றனவென்று சொல்லக்கூடுமானுலும், அறிவுள்ள சேதந வஸ்துக்களெல்லாம் தம் தம் ப்ரயோஜநத்தை உத்தேசித்தே கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கின்றனவாகையால், அவைகளைப் பகவானுடைய ப்ரயோஜநத்திற்காகவே இருப்பனவாகச் சொல்வது சரியன்றே' என்பதுதான். இது சரியான ஆக்ஷேபமே.

"𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨 𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌨 𑌮𑌨𑍍𑌦𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇"

[ஸ்வ ப்ரயோஜந மொன்றையும் கருதாமல், ஒன்றும் அறியாத மூடன்கூட கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கமாட்டான்] என்பது உண்மையன்றோ? நாம் ச்ரமப்பட்டு ஒரு கார்யத்தை ஸாதித்தோமே யானால், அது 'அந்தக் கார்யத்தின் பலத்தை நாம் அடையப்போகி றோம்' என்னும் எண்ணத்தாலன்றோ? 'ச்ரமப்படுவது நாம், பலனை அடைவது மற்றொருவன்' என்று இருந்தால் ஒருவனும் கார்யங்க ளில் ப்ரவ்ருத்திக்கமாட்டா னாகையால், நம்முடைய கார்யங்க ளின் பலத்தை நாம் அடையவில்லை என்று சொல்வது தவறுதலே ஆகும். ஆனால், 'சாஸ்த்ரம் அவ்விதம் சொல்லுகின்றதே!' என் றால், சாஸ்த்ரத்தின் கருத்து வேறு. 'ப்ரயோஜநம்' என்னும் சப் தத்திற்குப் 'பரம ப்ரயோஜநம்' என்பது தாத்பர்யம். சேதந வஸ்துக்க ளெல்லாம் அறிவுள்ளவை யாகையால், அவை தமது கார் யங்களின் பலத்தை அநுபவிக்கக்கூடியவையே. ஆனால், அப்படி அவை அநுபவிப்பதெல்லாம் பகவானுடைய ப்ரயோஜநத்திலேயே முடிவு பெறுகின்ற தாகையால், பரம ப்ரயோஜநம் பகவானுக்கென் றும் ஜீவன்களுக்கு அவாந்தர ப்ரயோஜநம் மாத்திர மென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இம்மாதிரி பரம ப்ரயோஜநம் ஒரு வனுக்கும் அவாந்தர ப்ரயோஜநம் மற்றொருவனுக்கும் இருப்பதை நாம் லோகத்திலும் காணலாம். பதியினிடம் ப்ரீதிசெய்யும் ஒரு ஸ்த்ரீ பூஷணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டால், அந்த அலங்காரத்தின் பலத்தைத் தான் உடனே அநுபவித்தாலும், அப் படி அவள் அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து ஆநந்திக்கும் பதிக்கன்றோ அதன் பரம பலம் போகின்றது? அம்மாதிரியே, நாம் செய்யும் ப்ரவ்ருத்திகளின் பலம் நமக்கு ப்ராப்த மாகையினும், அவைகளின் பரம பலம் பகவானுக்கே போகின்றது. இதுவே வஸ்து ஸ்திதியானதால், சாஸ்த்ரங்கள் பகவானைச் 'சேஷி' என் றும், மற்ற சேதநாசேதநங்க ளெல்லாவற்றையும் அவனுக்குச் 'சேஷ' பூதங்களென்றும் சொல்லுகின்றன.

நாம் செய்யும் கார்யங்களுடைய பலம் நமக்கே என்று ஜநிக்கும் தோற்றமெல்லாம் ப்ராந்தியே. உண்மையில் நாமெல்லா ரும் பகவானுக்காகவே இருக்கிறோம்; அப்படிப் பரார்த்தமாக இருப் பதே நம்முடைய ஸ்வபாவம். நமக்குக் கிடைக்கும் போகங்க ளெல் லாம் பகவானுக்கு லீலையாக இருந்துகொண்டு அவனுடைய ப்ர யோஜநத்தின்பொருட்டே ஆகின்றன. நமக்கு மோக்ஷம் கிடைப்ப தும் பகவானுடைய போகத்தின் பொருட்டே ஆகின்றது. நாம்

அநுபவிப்பதெல்லாம் நடுவில் கிடைக்கும் பலமே; பரம பலம் பகவானுக்கே. தத்வபரங்களான உபநிஷத்துக்களும் அவைகளின் அர்த்தத்தை விவரிக்கும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களும் சேதந வஸ்துக்களாகிற ஜீவன்களெல்லாரையும், அசேதந வஸ்துக்களைப் பேசுவதுபோல, 'பரார்த்தங்கள்' [வேறொருவனுடைய ப்ரயோஜநத்திற்காக இருப்பவை] என்றே பேசுகின்றன. இந்த ச்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களை இவ்விடத்தில் விவரிக்க அவகாசமில்லை யாகையால், அவைகளின் அர்த்தத்தைச் சரிவர உணர்ந்துள்ள நமது ஆசார்யர்களுள் ஒருவரின் பாசுரமொன்றை மாத்ரம் இதற்கு ப்ரமாணமாக இவ்விடத்தில் உரைக்கின்றோம். ஸ்ரீபராசர பட்டர், தமது ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கின்றார்.

"𑌉𑌪𑌾𑌦𑌤𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌨𑌿𑌯𑌮𑌨𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍌
𑌸𑍍𑌵𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑌦𑌤𑌿 𑌵𑌾𑌗𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑍀"

[லக்ஷ்மீ பதியாகிய பகவான் தனது ப்ரயோஜநத்தை உத்தேசித்தே சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கின்றான், அவைகளின் உள்ளில் ப்ரவேசித்து அவைகளை நியமிக்கின்றான், ஸம்ரக்ஷிக்கின்றான், ஸம்ஹரிக்கின்றான், அவைகளுக்குப் போக மோக்ஷங்களையும் கொடுக்கின்றான். உபநிஷத் இம்மாதிரி சொல்லுகின்றது]. இவ்விதம் சொல்லிவிட்டுப் பிறகு, ஜகத் முழுவதும் பகவானுடைய ப்ரயோஜநத்திற்காகவே இருப்பதால் அவன் ஜகத்தின் க்ஷேமத்திற்கு உபாயமாக இருப்பதும் ஜகத்தால் கடைசியாக அடையப்படவேண்டிய வஸ்துவாக இருப்பதும் அவனுக்கு இயற்கையாக இருக்குமவையே ஒழிய, வந்தேறியவையல்ல வென்பதை இந்தப் பாசுரத்தின் பின் பாதியால் விளக்குகின்றார்.

"𑌉𑌪𑌾𑌯𑍋𑌪𑍇𑌯𑌤𑍍𑌵𑍇 𑌤𑌦𑌿𑌹 𑌤𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌤𑍁 𑌗𑍁𑌣𑍌
𑌅𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯 𑌶𑌰𑌣𑌮𑌵𑍍𑌯𑌾𑌜𑌮𑌭𑌜𑌮𑍍"

[ஹே ஸ்ரீரங்கேசய! நீ இவ்விதம் ஜகத்திற்குச் சேஷியாக இருக்கிறபடியால், ஜீவன்களெல்லாருக்கும் போக மோக்ஷங்களை அடைவிப்பதில் நீ உபாயமாக இருப்பதும் அவர்களால் அடையப்படும் பொருளாக இருப்பதும் இந்த இரண்டும் உனக்கு ஸ்வபாவத்தாலேயே ஏற்பட்டவை; அவை வந்தேறியல்ல. ஆகையால் இதை அறிந்த நான், உன்னைச் சரணமாக அடையும்பொழுது அந்தச் சரணாகதியை எவ்வித ஸ்வப்ரயோஜநத்தையும் உத்தேசியாமலே

செய்கின்றேன்]." ஶரணஸவ்யாஜஸஹஜ்ஜ்' நான் பகவானைச் சரணமாக அடைவது அவ்யாஜமே [அதாவது—ஸ்வப்ரயோஜநத்தின் பொருட்டில்லை]. சேதநர்களுடைய ப்ரவ்ருத்திகளுக்கு ஸ்வப்ரயோஜநார்த்தத்வம் ஸ்வரூபமன்று என்பது இதன் கருத்து.

இவ்விடத்தில் மற்றுமொரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். அதாவது: 'இவ்விதம் நம்முடைய ப்ரவ்ருத்திகளால் பகவானுக்கு ஒரு ப்ரயோஜநம் ஏற்படுகின்றது என்று சொன்னால், அந்தப் பகவானை நாம் எப்படி அவாப்த ஸமஸ்த காமன் [அடையப்பட்ட ஸமஸ்த இஷ்டங்களையும் உடையவன்; அதாவது: இதுவரையில் அடையப்படாமல் இனி அடையப்படவேண்டியதான இஷ்டமொன்றும் அவனுக்கு இல்லை] என்று சொல்லலாம்? ச்ருதிகள் அவனைப்பற்றி அவ்விதம் பேசுகின்றனவே! நமது கார்யங்களால் அவனுக்கு ஒரு மேன்மை ஏற்படுகின்றது என்று சொல்வது சரியாகுமோ? நாம் எம்மாத்திரம்? நமது கார்யங்கள் எவ்வளவு அற்பங்கள்? இவை அவனுக்கு ஒரு அதிசயத்தைச் செய்கின்றன வென்று சொல்லலாமோ? நாம் நமது கார்யங்களைச் செய்யாவிட்டால் அவனுக்கு ஒருவித குறைவு ஏற்படும்போலன்றோ இதனால் தோன்றுகிறது? இது அத்யந்தம் அஸங்கதமாயிற்றே' என்பதுதான். இந்த ஸந்தேஹத்தை நமது ஆசார்யர்கள் பூர்ணமாக விசாரித்து, 'பகவானே பரம ப்ரயோஜநத்தை அடைகிறவன்' என்று சொல்வதில் எவ்வித தோஷமுமில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். 'பகவானை அவாப்த ஸமஸ்த காமன்' என்று சொல்வதன் தாத்பர்யம் வேறு. 'எதை எப்பொழுது விரும்புகிறானோ அதை அப்பொழுதே அடைவதற்கு வேண்டுவதான ஸாமர்த்யத்தை உடையவன்' என்பது அதன் தாத்பர்யமே தவிர, 'எப்பொழுதும் எல்லாக் காமங்களையும் அடைந்தவனாகவே இருக்கிறான்' என்பது அதன் தாத்பர்யமன்று. ஒருவன் எப்பொழுதும் எல்லாக் காமங்களையும் அடைந்தவனாக இருப்பது அஸங்கதம். லோகத்தில் காலத்திற்குத் தகுந்ததுபோலும் தேசத்திற்குத் தகுந்ததுபோலும் காமங்கள் மாறுவதை நாம் பார்க்கிறோம். அவையெல்லாம் ஒரே காலத்தில் ஒருவனுக்கு ப்ராப்தங்களாகுமோ? பரஸ்பரம் விருத்தமான காமங்கள் ஒருவனிடத்தில் ஏககாலத்தில் இருக்கமாட்டா வாகையால், 'அவாப்த ஸமஸ்த காமன்' என்பதற்கு அம்மாதிரி அர்த்தம் சொல்லக்கூடாது. எதை இச்சித்தாலும் அதை ஸாதித்துக்கொள்ளக்கூடிய சக்தியுடன் கூடியவன் என்று சொல்வதுதான் அந்தப் பதத்தின் சரியான அர்த்தமாகும்.

"ஸங்கல்பேந து ஹந்யாமித்யநு ஹரிமணௌஸ்வ"

[இச்சித்தால், விரல் நுனியால் ஸகல ராக்ஷஸர்களையும் நான் கொல்வேன்] என்பது அந்தத் திறமையை விளக்குகின்றது. ராக்ஷஸர்களைக் கொல்வதும் ஏற்கெனவே அவனால் அடையப்பட்டிருக்கும் காமங்களுள் ஒன்று என்று சொல்வது யுக்தமாகுமோ? ஆகையால், பகவான் ஒரு ப்ரயோஜநத்தை அடைகின்றான் என்று சொல்வது அவனுடைய அவாப்த ஸமஸ்த காமனுயிருக்கும் தன்மைக்கு விருத்தமன்று.

நிற்க; நம்முடைய ப்ரவ்ருத்திகள் ஏன் பகவானுடைய பெருமையின் பொருட்டு ஆகமாட்டா? எல்லாம் அவனுடைய பெருமைக்காக வன்றோ ஸம்பவிக்கின்றது? ஜகத் இருப்பதும் மாறுவதும், ஸூர்ய சந்த்ரர்கள் உதயம் அஸ்தமயம் அடைவதும், காற்று வீசுவதும், அக்நி ஜ்வலிப்பதும், ஸமுத்ரம் அடங்கி அலைவீசுவதும் இன்னும் இந்த ஜகத்தில் ஏற்படும் ஸம்பவங்களெல்லாம் அவனுடைய பெருமைக்காக வன்றோ? இவைகளுள் ஏதாவது ஒன்றின் ஒரு லேசத்தை நம்முடைய பெருமைக்கென்று நாம் சொல்லிக் கொள்ளக் கூடுமோ?

"மேகோதய: ஸாகரஸந்நிவ்ருத்தி
இந்தோர்விபாக: ஸ்புரிதாநி வாயோ: |
வித்யுத்விபங்கோ கதிருஷ்ணரஸ்மே
விஷ்ணோர் விசித்ரா: ப்ரபவந்தி மாயா: ||"

[மேகங்கள் ஆவிர்ப்பவிப்பதும், ஸமுத்ரம் அடங்கி இருப்பதும், சந்த்ரன் குறைந்து வளர்வதும், காற்று கிளம்பி வீசுவதும், மின்னல் மின்னுவதும், ஸூர்யன் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதும் இவையெல்லாம் விஷ்ணுவின் ஆச்சரியகரமான சக்தியல்லவோ?]

["நெடுங்கடனிற்பதும் ஞாயிறு காய்வதும் நிற்றலுங்கால்
ஓடுங்கி நடப்பதும் தண்கார் பொழிவது மூழிதனிற்
சுடுங்கனல் பற்றிச் சுடாதேயிருப்பதுந் தும்பை புனைந்
தடுங்கனலாழி அரங்கேசர்தம் திருவாணையினே"]

இவ்விதம் எல்லாம் பகவானுடைய கட்டளைக்கு உட்பட்டதாக இருக்கையில், நம்முடைய ப்ரவ்ருத்திகள் மாத்திரம் எவ்விதம் அவனுடைய கட்டளைக்கு உட்படாமல் இருக்கக்கூடும்? எல்லாம் அவனுடைய ஆஜ்ஞை; ஆகையால்தான் நாம் ஸகல ப்ரவ்ருத்திகளையும் அவனுக்கு அர்ப்பணம் செய்கின்றோம். ஸகல கார்யங்களாலும் அவனே ஆராதிக்கப்படுகின்றான்.

“𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿𑌯𑌤𑍍।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍”॥

[ஹே அர்ஜுந! தேஹ யாத்ரைக்காகச் செய்யப்படும் லௌகிக கார்யங்களையும், தேஹ தாரணத்திற்காகப் புஜிப்பதையும், இன்னும் நீ செய்யும் வைதிக கர்மங்களையும் எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணம்; செய். அதாவது அவைகளால் நானே ஆராதிக்கப்படுகிறேன் என்று எண்ணு.] என்று பகவானே நியமிக்கவில்லையா? அவன் ஸர்வ கர்ம ஸமாராத்யனுகையால் நாம் செய்யும் கார்யங்கள் எவ்வளவு அல்பமாக இருந்தபோதிலும், அவையெல்லாம் அவனுடைய ப்ரயோஜநத்தின் பொருட்டே ஆகின்றன என்பது ஸித்தம். இவையெல்லாம் அவனுக்கு ஒரு விளையாட்டே.

‘நாம் போகங்களை அநுபவிப்பதும், ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களும் பகவானுக்கு விளையாட்டாக இருக்கின்றனவென்று சொல்வது சரியா? ஜகத்தில் ஜந்துக்கள் கஷ்டங்களை அநுபவிப்பதும், துக்கம் நிறைந்துள்ள இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதும் ஒரு லீலையாகுமோ? இவை யெல்லாவற்றையும் லீலை என்று சொன்னுல் ஸகர மஹாராஜனுடைய புத்ரனென்று புராணங்களில் ப்ரஸித்தனுயுள்ள அஸமஞ்சன் போலவன்றோ பகவான் தயையற்ற க்ரூரனுக நினைக்கப்படவேண்டும்?’ இத்யாதியான சங்கைகளும் இவ்விடத்தில் உண்டாகக்கூடும். இந்த விஷயத்தின் உண்மையைப் பின்வருமாறு நமது சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன. ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலியவைகள், அநாதிகாலமாக ஸம்ஸாரக் கட்டில் அகப்பட்டு வரும் ஜீவ கோடிகளின் கர்மங்களுக்குத் தக்கபடி பகவானுல் செய்யப்பட்டு வருகின்றன. ஜகத்தில் தென்படும் ஏற்றக் குறைவுகளெல்லாம் ஜீவன்களின் கர்ம விசேஷங்களின் கார்யம். பகவான் அவைகளின் உத்பத்தியில் நிமித்த மாத்ரமாக இருந்துகொண்டு அவைகளுக்கு ஸாதாரண காரணமாகின்றுன். பூமியில் விளையும் தாந்யங்களின் வேறுபாடு முதலியவை அந்தந்த விதைகளையும் பூமியின் செழிப்பையும் பொருத்திருப்பனபோல, நம்முடைய ஏற்றக் குறைவுகளெல்லாம் நம்முடைய கர்மங்களைச் சார்ந்திருக்கின்றன; பயிர்களின் உத்பத்திக்கு மழை ஸாதாரண காரணமாவதுபோல, ஜகத்தின் ஸ்ருஷ்டிக்குப் பகவான் ஸாதாரண காரணமாகின்றுன். ஆகையால் இந்த ஸ்ருஷ்டி விஷயத்தில் அவனை அஸமஞ்ஜனுக்கு ஒப்பிடுவது சரியன்று. விசித்ர ஸ்ருஷ்டி அநாதியென்றும் அந்த ஸ்ருஷ்டிக்குக் காரணமாயுள்ள கர்ம ப்ரவாஹமும் அநாதியென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லு

கின்றன. இவ்விதம் அவன் ஸ்ருஷ்டி செய்யாவிடில், ஸம்ஸாரக் கட்டில் அகப்பட்டுள்ள ஜீவகோடிகளின் கர்மங்கள் கழியமாட்டா. கர்மங்கள் கழியும்படியான அவகாசத்தைக் கொடுத்து அந்த ஜீவன்களை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றவேண்டுமென்பதே அவனுடைய நோக்கம். 'ஜீவன்களைக் காப்பாற்றுவதே அவனுடைய நோக்கமாக இருந்தால், அதை அவன் தனது இச்சையாலே மாத்திரம் ஸாதிக்கக்கூடாதா? அப்படிச் செய்ய அவன் சக்தனன்றோ?' என்று கேட்கவும் இடமில்லை. புண்ய கர்மங்களைச் செய்தவர்களுக்குப் புண்ய பலங்களையும் பாபகர்மங்களைச் செய்தவர்களுக்குப் பாப பலங்களையும் கொடாமல், எல்லாருக்கும் ஒரேவிதமான அநுக்ரஹத்தைப் பகவான் செய்தால்,யுக்தாயுக்தங்களை விசாரியாமல் எல்லா ப்ரஜைகளையும் அநுக்ரஹிக்கப் புகும் அரசனுக்குப்போலப் பகவானுக்குத் தோஷம் ஸம்பவிக்குமன்றோ? ஆகையால், வ்ரண வைத்தியன் வ்ரணத்தை எரித்தும் அதை அறுத்தும் வ்யாதிக்காரர்களை ஸ்வஸ்தர்களாகச் செய்வதுபோல, பகவான் கர்மங்களுக்குத் தகுந்த போகங்களைக் கொடுத்து ஜீவன்களுக்கு நல்வழி காட்டுகின்றான். இதுமாத்திரமன்று. அவன் நமது நிருபாதிக ஸ்வாமியென்பதையும் அவன் அவ்விதம் கரைபுரண்ட தயையுள்ளவன் என்பதையும் உணர்ந்து, அவனிடம் திரும்ப நாம் அளவற்ற ப்ரீதிசெய்து அவனையே சரணமாக அடைந்தால், அவன் தனது அளவற்ற சக்தியைக்கொண்டு நமது கர்மங்களெல்லாவற்றையும் அப்பொழுதே நசிப்பித்து நம்மை ஸம்ஸாரக் கட்டிலிருந்து காப்பாற்றுவான் என்பதிலும் ஸந்தேஹமில்லை.

இப்படி, பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவை ஜீவகோடிகளின் நன்மையை உத்தேசித்துச் செய்யப்படுகையிலும், அந்த ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களின் பரம ப்ரயோஜநத்தைத் தானே அடைகின்றான் என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அதாவது: ஸ்ருஷ்டி முதலியவை பரார்த்தங்களாக இருக்கையிலும், அவை கடைசியாக ஸ்வப்ரயோஜநத்திலேயே முடிவு அடைகின்றன. புத்ர மித்ர களத்ராதிகளைப் போஷித்து அவர்களுக்குப் போகங்களை ஸம்பாதித்துக் கொடுத்து, அதனால் அவர்களை ஆநந்திப்பித்து, அப்படி அவர்கள் ஆநந்தப்படுவதால் மாதா பிதா முதலியவர்கள் ஆநந்தத்தைப் பெறுவதுபோல, பகவான் நம்முடைய ஸ்ருஷ்டி முதலியவைகளால் ஸ்வயம் த்ருப்தி அடைகின்றான். ஆகையால் அவனுடைய ஜகத்வ்யாபாரம் முழுவதும் ஸ்வ ப்ரயோஜநத்திலேயே முடிவு பெறுகின்றதுஎன்று சொல்வதில் எவ்வித தோஷமும் இல்லை. இவ்விதம்

ஸர்வ ஜகத்துக்கும் அவன் சேஷியாக இருப்பதால், சரீரத்தின் மூன்றுவது லக்ஷணமும் அவனிடம் நன்றுகப் பொருந்துகின்றது.

'சேஷன்' 'சேஷி' என்பவைகளுக்கு ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு லக்ஷணம் கூறியிருக்கிறுர்.

"பரஸ்ய அதிஶய ஆதேயேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ:, பர: ஶேஷீ"

[மற்றொருவன் ஸம்பத்தமான யாதொரு அதிசய முண்டோ அதைச் செய்யவேண்டுமென்னும் விருப்பத்தால் அங்கீகரிப்பதற்கு யோக்யமாயிருப்பதே எவனுடைய ஸ்வரூபமாக இருக்கின்றதோ அவன் சேஷன்; மற்றொருவன் அவனைக் குறித்து சேஷி என்று வ்யவஹரிக்கப்படுவன்]. ப்ரக்ருதத்தில் சேதநா சேதநங்களுடைய ஸ்வரூபமானது பகவானுடைய அதிசயத்தின் பொருட்டு அங்கீகரிக்கத் தகுந்ததாகவே இருக்கின்றபடியால் அவைகள் சேஷங்களாகின்றன; அவைகளைக் குறித்துப் பகவான் சேஷியாகின்றுன். ஸ்ரீ பாஷ்யகாரருடைய லக்ஷணத்தில் ஒவ்வொரு பதமும் ஒவ்வொரு விஷயத்தை உத்தேசித்தே ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஆனல் அந்த விஷயங்களை இப்பொழுது விசாரிக்க ஸாத்யமில்லை யாதலால் அவைகளை விசாரியாமல் விடுகின்றேும். அந்த லக்ஷணத்தின் மொத்த அர்த்தத்தைப் பின் வருமாறு சொல்லலாம்.

"அந்யஸ்ய ப்ரயோஜநமேவ யஸ்ய பரமப்ரயோஜநம் ஸ ஶேஷ:, அந்ய: ஶேஷீ"

[எவனுக்கு மற்றொருவனுடைய ப்ரயோஜநமே பரம ப்ரயோஜநமாகின்றதோ அவன் சேஷன்; மற்றொருவன் சேஷி].

இவ்விதம் சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் பகவானுக்கு நியமேந தார்யமாயும் நியாம்யமாயும் சேஷமாயும் இருக்கிறபடியால், அவைகளைப் பகவானுடைய சரீரமென்று சொல்வதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை. 'நியமேந' என்பதற்கு 'அந்த வஸ்துக்கள் இருக்கும் காலமெல்லாம்' என்பது பொருள்.

லோகத்தில் ஸாமாந்யமாக 'சரீரம்' என்பதற்குப் பின்வருமாறு லக்ஷணம் சொல்வார்கள். எது ஸுகதுக்க அநுபவத்திற்கு ஸாதநங்களான இந்த்ரியங்களுக்கு ஆச்ரயமாக இருக்கின்றதோ, எதன் இருப்பு ப்ராண வாயுவின் ஐந்துவித வ்ருத்திகளைச் சார்ந்து

நிற்கின்றதோ, எது ப்ருதிவி முதலிய ஐந்து பூதங்களின் கார்யமோ, அது சரீரம். இந்த லக்ஷணம் லோகத்தில் தென்படும் சரீரங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான லக்ஷணமாக மாட்டாது. மரம் முதலிய ஸ்தாவரங்களுக்கு ப்ராணன் இருக்கின்றது; ஆனால் அவைகளின் சரீரத்தில் ப்ராண வாயு ஐந்து விதமாக இருந்து கொண்டு அந்தச் சரீரத்தைத் தரிக்கவில்லை. நிற்க: அஹல்யை முதலானவர்கள் தாம் சாபமடைந்திருந்த காலத்தில் கல் முதலான சரீரத்தை அடைந்திருந்தார்கள் என்று நாம் புராணங்களிலிருந்து அறிகின்றோம். அந்தச் சரீரங்களை இந்த்ரியங்கள் ஆச்ரயித்திருக்கவில்லை; அவைகளில் ஸுகதுக்கானுபவமும் இல்லை. ஆகையால், கீழ்ச்சொல்லிய லக்ஷணம் அந்தச் சரீரங்களுக்கு ஒட்டமாட்டாது. தவிரவும், முக்தர்கள் தம் தம் இஷ்டப்ரகாரம் சரீரங்கள் எடுத்துக்கொள்ளச் சக்தர்கள் என்று உபநிஷத் சொல்லுகின்றது. அந்தச் சரீரங்கள் ப்ருதிவீ முதலிய பஞ்ச பூதங்களின் விகாரமல்லவாகையால், அவைகளுக்கும் இந்த லக்ஷணம் அந்வயிக்கமாட்டாது. உபநிஷத்தில், பகவானுக்கு ப்ருதிவீ ஜீவன் முதலிய ஸகல பதார்த்தங்களும் சரீரமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விடத்திலும் இந்த லக்ஷணம் ஒட்டமாட்டாது. இவ்விதம், லோகத்தில் வ்யவஹரிக்கப்படும் இந்த லக்ஷணம் தோஷ துஷ்டமாயிருக்கிறபடியால், நமது பெரியோர்கள் அதை ஸாதுவன்றென்று நிராகரித்துவிட்டு வேறு லக்ஷணத்தைக் கைப்பற்றினார்கள். அவர்களால் கைப்பற்றப்பட்டுள்ள அந்த லக்ஷணம், லோகம் வேதம் இவைகளில் 'சரீபம்' என்று வ்யவஹரிக்கப்படும் வஸ்துக்களெல்லாவற்றுக்கும் எவ்வித க்லேசமுமின்றிக்கு அந்வயிக்கின்றது என்பதை இவ்விடத்திற் செய்யப்பட்டுள்ள உபபாதநத்திலிருந்து எல்லாரும் அறியலாம். இவ்விதம் ஸகல சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றையும், ப்ரளயதசையிலும் ஸ்ருஷ்டிதசையிலும் எப்பொழுதும், பகவான் சரீரமாக உடைத்தாயிருக்கிறான் என்பதுதான் நமது அஸாதாரணமான கொள்கை.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ராமாவதார மஹிமை.

ஸ்ரீராம மூர்த்தியைக் குறித்துச் சொல்லப்படாத புராணமாவது இதிஹாஸமாவது கிடையாதென்றே சொல்லலாம். ஸ்ரீமஹா பாரதத்திலும் ஸ்ரீராம சரித்ரத்தை விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார் ஸ்ரீவ்யாஸ பகவான். காளிதாஸர் பவபூதி முதலிய கவிச் சக்ரவர்த்திகளும் ஸ்ரீராம மூர்த்தியைக் குறித்து க்ரந்தங்கள் எழுதியிருக்கிறார்க்ள். இந்த க்ரந்தங்களெல்லாம் இருவகைப்படுமென்று சொல்லக்கூடும். ஸ்ரீராமனைச் சுத்த மநுஷ்யாவதாரமாகவும் க்ருஷ்ணாவதாரத்தில்போல் தான் பரமாத்மா என்னும் எண்ணமில்லாதவராகவும் ராமாயணத்தில் எழுதியிருப்பது போல் எழுதிய க்ரந்தங்கள் ஒரு வகுப்பாகும். அத்யாத்ம ராமாயணத்தை அநுஸரித்து ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி தான் பரமாத்மா என்பதைத் தெரிந்துகொண்டேயுள்ளவராக எழுதப்பட்டிருப்பது. இது மற்றொரு வகுப்பு. இதற்கு ஆதாரம் அத்யாத்ம ராமாயணமேயல்லாமல் ஸ்ரீராம தாபநீ உபநிஷத் முதலியவையுமாகும். இவ்விரண்டுந் தவிர, உபாஸநா க்ரமத்தில் ஸ்ரீராமனைப் பரமாத்மாவாக அநுஸந்தாநம் செய்வதற்கு வேண்டிய கல்பங்களும் மந்த்ரயந்த்ரோத்தாரணங்களும் பல இருந்து வருகின்றன. ஸ்ரீராம மந்த்ரத்தையே பல பேர் பலவிதமாக உபதேசமடைந்து ஜபித்து வருகிறார்கள். இவைகள் இப்படி இருக்க, வால்மீகி மஹர்ஷி ஸ்ரீராமமூர்த்தியை மநுஷ்யராக உபதேசித்ததின் கருத்தைக் கவனிப்போம்.

பவபூதி முதலானவர்கள் ஸ்ரீராம சரித்ரத்தை நாடகரூபமாக எழுதும்போது, கதாநாயகன் தீரோதாத்தனாயும் உத்தம மநுஷ்யனாயுமிருப்பதே உசிதமென்றெண்ணி ஸ்ரீராமனுக்கு மநுஷ்ய குணங்களையே அதிகமாக எடுத்துரைத்திருப்பதாகச் சொல்லலாம். வால்மீகியும் எழுதியது ஆதிகாவ்யமாகையால், காவ்யத்திற்கு உரியபடி ஸ்ரீராமமூர்த்தியை மநுஷ்யராகவே வர்ணித்துவந்தாரென்றும் சொல்வதுண்டு. மஹர்ஷி கண்டோக்தியாய் ஸ்ரீராம மூர்த்திக்குத் தான் பரமாத்மா என்ற ஜ்ஞாநம் இருப்பதாக, ஜடாயு மோக்ஷம் சரபங்கர் மோக்ஷம் முதலிய சில இடங்களில் எழுதவில்லை என்ற

போதிலும், அவர் தாம் பரமாத்மா என்று தெரிந்துகொண்டிருப்ப தாகக் காட்டத்தக்க இடங்கள் பல உண்டென்று சொல்லக்கூடும். நிற்க: மஹர்ஷி வேண்டுமென்றே ஸ்ரீராமனை ஸாதாரணமான மநுஷ்யராக எழுதினாரென்பதை ஸ்தாபிப்பதற்குப் பல காரணங்க ளுண்டு.

ஆரம்பத்தில் தேவதைகள் மஹா விஷ்ணுவை ப்ரார்த்தித்த தின் பேரில், அவர் அவதரிப்பதாய் ஒத்துக்கொண்டு, பாயஸ ரூப மாய்த் தசரத பத்நிகளை அடைந்து விஷ்ணுவின் அம்சமாக நான்கு புத்ரர்களாக அவதரித்தார்கள். தவிர, அவர்கள் மற்ற ராஜவம்சத் தில் பிறந்த குழந்தைகளை விட மேம்பாடு உடையவர்களாகத் தெரிவிக்க வந்தார் என்று சொல்லவே முடியாது. ஏனென்றால்: வஸிஷ்ட விஶ்வாமித்ராதி மஹர்ஷிகள் ஸ்ரீராமாவதார ரஹஸ்யத் தை அறிந்தவர்களாய் இருந்த போதிலும், ஸ்ரீராமனிடத்தில் நமஸ் காராதிகளைச் செய்துவந்தார்க ளென்றாவது அவரைப் பரமாத்மா வாக உபாஸித்து வந்தார்களென்றாவது வால்மீகி எழுதவில்லை. ஆனால் இப்படி அம்மஹர்ஷிகள் நடந்ததற்கும் கவி அவ்வாறு எழுதி இருப்பதற்கும் காரணம் வேறென்றுசொல்வதுண்டு. அது என்னவென்றால்: மஹர்ஷிகள் ராமபிரானைப் பரமாத்மாவாக உபா ஸித்து வரும்படி ராமன் தன் பரமாத்ம ரஹஸ்யத்தை வெளியிட்டி ருக்கும் பக்ஷத்தில் மநுஷ்யனல்லாத ராவணன் மரணமடைய வேண்டுமென்கிற அபிப்பிராயம் பொய்யாய்விடும் என்பதே. அத் யாத்ம ராமாயணத்திலோ வென்றால், ஸாதுக்கள் தங்களுடைய தபோபலத்தாலும் சித்த நைர்மல்யத்தாலும் ஸ்ரீராமாவதாரத்தைப் பற்றி மஹர்ஷிகள் மூலமாகத் தெரிந்துகொண்டு அபூர்வமும் அமாநுஷமுமான சில கார்யங்களைக் கண்டு ஸ்தோத்ரம் பண்ணுவ துடன், ஸ்ரீராமனும் தான் மாயா மாநுஷனாக நடந்துகொண்ட தாகவே எழுதப்பட்டிருக்கிறது.

வால்மீகி ராமாயண ரீதியில் ஸ்ரீராமனுக்கு, தாம் பரமாத்மா என்ற எண்ணம் கிடையவே கிடையாது. மற்றவர்கள் அவரை அவ்விதம் ஸ்தோத்ரம் பண்ணினபோதிலும், “ ஆத்மாநம் மாநுஷம் மந்யே ” என்று தாம் மநுஷ்யனென்றும் தசரத புத்ர னென்றுமே தெரியப்படுத்துகிறார். இவ்விதமாய் ஸ்ரீராமனைச் சுத்த மநுஷ்யனாகவே வால்மீகி எழுதியிருப்பதின் ஸூக்ஷ்மமான கார ணம், அவர் ஸ்ரீராம சரித்ரத்தால் மநுஷ்ய ஜந்மாவின் பெருமை யை எடுத்துக் காட்டவேண்டும் என்பதென்றே நாம் நினைக்கி றோம். உத்தமமான பதவியை யடைவதற்குச் சாஸ்த்ரங்கள்

எவைகளையெல்லாம் ஸாதநங்களாகச் சொல்லுகின்றனவோ, அந்த ஸாதநங்களெல்லாம் ஸ்ரீராமனுக்குக் கிடைத்திருந்தன. அவை யாவையெனில்: நற்குலப் பிறப்பு, ப்ரஹ்மசர்யவ்ரதம், குரு சுச்ருஷை, வர்ணாச்ரமங்களுக்குரிய வைதிக ஸம்ஸ்காரங்கள், ஸ்வதர்ம நிஷ்டை, தபஸ் முதலியன. ஜந்மாந்த்ர ஸுக்ருதத்தால் இந்த ஸாதநங்கள் இல்லாமலே ஜநந காலத்திலேயே ஜ்ஞாநிகளாகப் பிறக்கலாமென்றிருந்தாலும், இவைகள் அத்யந்தோபகாரமென்று நன்கு தெரிவிக்கவேண்டுமென்பதோடும், இந்த ஸாதநங்களையும் ஆசரணைகளையுங்கொண்டு உத்தம பதவியை அடையலாம் என்பதையும், வைதிக மார்க்கம் தவறாமல் அநுஷ்டித்து வருவதால் பரம்பரையாய் எல்லா அப்யுதய நிச்ரேயஸங்களும் கிடைக்குமென்று தெரிவிப்பதற்கே வால்மீகி மஹர்ஷி ஸ்ரீராம சரித்ரத்தை எழுதியதாகக் காணப்படுகிறது.

விதுரர் தர்மவ்யாதர் முதலானவர்கள் தாழ்ந்த ஜாதியிலிருந்து ஜ்ஞாநிகளாக இருந்தார்களென்பது, ஜ்ஞாநத்திற்கு எல்லாரும் பாத்ரர்களென்பதைத் தெரிவிப்பதற்கே யொழிய 'ஆபிஜாத்யத்துக்கு ப்ரயோஜநமில்லை யென்று சொல்வதற்காக அல்ல. ஆகையால் காளிதாஸன், "ஸோஹமாஜந்மஶுத்தாநாம்" என்று சொன்னபடியும், "வம்ஶே ஜாத: ஸவிதுரநகே" என்று ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளினபடியும், மநு இக்ஷ்வாகு மாந்தாதா முதலியவர்கள் பிறந்த வம்சத்தில் அஶ்வமேதத்தால் பரிசுத்தமடைந்த தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரர்களென்பதாலேயே உத்தம குலத்தில் ஜநநத்தின் பலனை நன்றாய் எடுத்துக் காட்டுகிறார். ஆகையால்தான் வால்மீகியும், "விதுஷம் ரோவயாஶாவ" என்று அருளிச்செய்தார்.

பிறகு, உரிய காலத்தில் உபநீதர்களாய், குரு சுச்ருஷா புரஸ்ஸரமாக வித்யாப்யாஸம் அடைந்து, வைதிகமான விவாஹம் செய்துகொள்வதின் குணத்தைக் காண்பிக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன், ஸ்ரீராமபிரானுக்கு ஜநகரின் யஜ்ஞ சாலையில் ப்ராஹ்ம விவாஹத்தின் விவரங்களை விவரமாய் வர்ணிப்பதுடன் "இயம் ஸீதா" என்கிற சுலோகத்தால் வைதிக விவாஹத்தின் அபிப்ராயத்தையும் விவாஹ மந்த்ரம் பிறந்ததின் பெருமையையும் எடுத்துக் காட்டினார். பிறகு ஸ்ரீராமன் க்ருஹஸ்தனாயும், வநவாஸம் செய்துவந்தபோது வாநப்ரஸ்தனாயு மிருந்த காலத்தில் அநுஷ்டித்த தர்மங்களும் தபஸ்சர்யையும் நன்கு விளங்குமாறு ஆரண்ய

கிஷ்கிந்தா காண்டங்களில் விஸ்தாரமாய் வர்ணித்து வந்தார். க்ஷத்ரிய ஜந்மா விடுத்து, சாஸ்த்ர முறைப்படி ராஜ்யபரிபாலநம் பண்ணி, க்ஷத்ரிய தர்மத்தை அநுஷ்டிப்பதால் "𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃" என்கிறபடி பரம ஸௌக்யத்தை அடையலாமென்பதையும் "𑌯𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑌤𑍋 𑌜𑌯𑌃" என்பதையும் நன்ருய்த் தெரிவித்தார்.

இவையெல்லாம் உண்மையென்று தெரிவிப்பதற்காக மஹர்ஷி, லக்ஷ்மணன் மூலமாய் இந்த்ரஜித்தின் வதத்தின்பொழுது ஸ்ரீராமன் பெருமையை எடுத்துக் காட்டியிருக்கிருர். "𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑌶𑍍𑌚" இத்யாதியான சுலோகத்தின் கௌரவம்தெரியாதவர்கள் கிடையாதென்றே சொல்லவேண்டும். இந்த சுலோகத்தால், ஸ்ரீராமாவதாரத்தின் பெருமையை லக்ஷ்மணன் நன்கு வெளியிட்டிருக்கிருர். "𑌵𑍇𑌦𑌮𑌨𑍂𑌚𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑌿" என்று ஆரம்பிக்கும் தைத்திரீய உபநிஷத்தில் வேதாத்யயநம் முடிந்த சிஷ்யன் பொருட்டுச் செய்த உபதேசங்களில் ஸாரபூதமான "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦, 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰" என்கிற இரண்டு உபதேஸங்களைத் தவருமல் ஸ்ரீராமன் நடத்திவரும்பக்ஷத்தில் என்று சபதம் செய்வதால், வேதமார்க்க நிஷ்டரென்றும் வைதிக தர்ம மார்க்க நிரதரென்றும், அம்மார்க்கத்திலேயே ஸ்ரீராமனுக்கு உள்ள கௌரவமும் பராக்ரமும் ஏற்பட்டதென்றும், இவைகளைக் காட்டிலும் வேறு ஸாதநங்கள் அநாவசியமென்றும் மஹர்ஷி தெரிவிக்கிருர். இந்த ரஹஸ்யத்தைப் பலப்படுத்துவதற்காகவே "𑌰𑌾𑌮𑍋 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌰𑍍𑌯𑌦𑌿" என்று தசரத குமாரன் ராமன் என்றும், "𑌪𑍌𑌰𑍁𑌷𑍇 𑌚𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌃" என்றும், "𑌦𑍈𑌵𑌂 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂" என்றபடி மநுஷ்யனுல் ஸம்பாதிக்கக்கூடிய திறமையுள்ளவர்களில் அதாவது மநுஷ்ய ஜந்மாவில் தர்மாசரணையாலும் வைதிக மார்க்காநுஸரணையாலும் ஸம்பாதிக்கக்கூடிய திறமையுள்ளவர்களில் நிகரற்றவராயிருக்கும்பக்ஷத்தில், பாணமே! "𑌰𑌾𑌵𑌣𑌿𑌂" மாயா வித்யை தெரிந்தவனுன ராவண புத்ரனைக் கொல்' என்ற வார்த்தையை நன்ருய் எடுத்துக் காட்டியிருக்கிருர்.

ஆகையால் ஸ்ரீராமமூர்த்தியை ஓர் அவதார புருஷனுகவால்மீகி ஒத்துக்கொண்டபோதிலும், மற்ற க்ரந்தங்களில்போல் அவருக்குத் தாம் பரமாத்மா என்ற ஜ்ஞாநம் கிடையாதென்றும், மநுஷ்யனுகப் பிறக்கக்கூடிய ஜீவனுக்கு இந்த உலகத்தில் எந்த ஸாதநங்

கள் கிடைக்குமோ அந்த ஸாதனங்களைக் கொண்டே ராவணனை அவர் ஸம்ஹாரம் செய்தாரென்றும், மாயா மாநுஷனாக இருந்தும் வஞ்சனை கொஞ்சமெனும் கிடையாதென்றும், தேவேந்த்ரன் முதலியவர்கள் ஸம்ஹாரத்துக்கு வேண்டிய ஸஹாயம செய்தார்களென்ருல், "தவஸு ஜெவா சுவஸுஸெ" என்கிறபடி வைதிக நிஷ்டர்கள் எல்லோர்க்கும் இவ்வித உபகாரம் கிடைக்குமென்பதை ஸூசித்துக் காட்டினர் என்றும், ஸ்ரீராம சரித்ரத்தின் மூலமாய் நமக்கு மஹர்ஷி உபதேசித்திருக்கிருரென்றே தெரியவருகிறது.

ஏ. நடராஜையர்.

ஓம் தத்ஸத்

ஸ்ரீ:

ஆதார ஆதேயங்கள்.

முன்னொரு காலத்தில் தர்க்கம் செய்வதில் பெயர்போன ஒரு கூட்டத்தார் இருந்தனர் அவர்கள் "சலநம் ஸாத்யமா? அஸாத்தியமா?" "ஒரு குண்டூசியின் முனையில் எத்தனை தேவதைகள் நடனஞ் செய்யக்கூடும்?" ஆகிய இவை போன்ற கஷ்டமான கேள்விகட்குத் தங்கள் தர்க்க வல்லமையைக் கொண்டு சரி என்று ஒத்துக்கொள்ளும்படியாக விவாதஞ் செய்து, கடையில் லோகாநுபவத்திற்கு மாறுபாடாகத் தீர்ப்பளிப்பார்களாம்.

அவர்களிற் சிலர் ஒரு நாள் கூட்டங்கூடி, "நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?" என்கிற விஷயத்தைக் குறித்துத் தர்க்கந் தொடங்கி, நெடுநேரம் வரையில் தங்கள் புத்தி சாதுர்யத்தைக் கொண்டு விவாதஞ் செய்தும் அவர்களில் ஒருவரும் தீர்மானத்திற்கு வந்திலர். கடைசியில் அக்ராஸநாதிபதி இரண்டு கக்ஷிகளின் விவாதங்களையும் சீர்தூக்கி ஒத்திட்டுப் பார்த்து, "ஆமாம்; தொன்னைதான் நெய்க்கு ஆதாரமென்பது ஸாமாந்ய ஜநங்களின் அபிப்ராயமானாலும், அதை ஒத்துக்கொள்வதென்ருல் எனக்கும் கொஞ்சம் வருத்தமாகத்தா னிருக்கிறது. மேலான வஸ்துக்களுக்குத் தாழ்வான வஸ்துக்கள் ஆதாரமென்ருல், அது அகௌரவமாகாதா? நெய்க்காகத்தானே தொன்னை என்ற பாத்திர மேற்பட்டது. நெய் தேவதைகளுக்கு ப்ரீதியாக ஹோமாக்நியில் ஆஹுதி செய்யப்படுகிறது. பிறகு தொன்னை குப்பையில் எறிந்து விடப்படுகிறது. ஆகவே நெய்தான் தொன்

னைக்கு ஆதாரமாக இருக்கவேண்டும். ஆனாலும் இதைப் பரீக்ஷித்துப் பார்த்து விட்டுத்தான் தீர்மாநம் சொல்லலாம்" என்று அங்கே மேஜையின் பேரில் வைக்கப்பட்டிருந்த நெய்த் தொன்னையைக் கவிழ்த்துப் பார்த்தார். இதற்குள் அதிலிருந்த நெய் கெட்டியாய்த் தோய்ந்திருந்தமையால் நெய் கீழே விழாமல் தொன்னையிலேயே ஒட்டிக் கொண்டிருந்தது. ஆகையால், "தொன்னைக்கு நெய்யே ஆதாரம்" என்று தீர்மாநம் சொல்லிவிட்டார்.

இக்கதையில் கூறியது போலவே வாக்யார்த்தம் செய்யும் தர்க்கவாதிகள் இக்காலத்திலும் அனேகரிருக்கிறார்கள். அவர்கள் எதையும் தர்க்க விசாரணையின்றி ஒப்புக்கொள்ள மாட்டார்கள். 'கடவுள் ஒருவர் உண்டு, இல்லை' என்பதும், மேல்வர்க்கத்தினர்க்குக் கீழ்வர்க்கத்தினர் ஆதாரமா?' கீழ்வர்க்கத்தினர்க்கு மேல்வர்க்கத்தினர் ஆதாரமா?' என்பதும், 'ஆசார்யனுக்குச் சிஷ்யன் ஆதாரமா?' 'சிஷ்யனுக்கு ஆசார்யன் ஆதாரமா?' என்பதும், 'அரசனுக்கு ப்ரஜைகளாதாரமா?' 'பிரஜைகளுக்கு அரசனாதாரமா?' என்பதும், ஆகிய இன்னும் இவைபோன்ற கேள்விகளைத் தர்க்கம் செய்தே தீர்மானிக்கவேண்டுமென்பது இவர்கள் கொள்கை. இவர்கள் நெடுநாள் அல்லும் பகலும் தங்கள் கல்வியைக் கொண்டு ஓயாமல் தர்க்கஞ் செய்தும், தங்கள் முன்னோர் தங்களுக்கு ஆஸ்தியாய் வைத்துவிட்டுப்போன ஓலைச்சுவடிகளைப் புரட்டி புரட்டிப் பார்த்தும் ஒரு முடிவுக்கு வருவதற்குள், யுக ப்ரளயம் வந்து எல்லோரையும் ஸமமாக்கி விடுமென்பது திண்ணம்.

ஜீவாத்ம பரமாத்ம தத்வங்கள் ஒன்றற்கொன்று ஆதாரமாக அன்பெனும் பாசத்தினால் கட்டுப்பட்டு நிற்கின்றனவென்பது விசிஷ்டாத்வைத மதக்கொள்கை. எப்படி நெய், தன்னுடைய த்ரவத்வம் மாறி இறுகிப்போனால் தொன்னையின் ஆதரவை நிராகரிக்கிறதோ, அப்படியே ஆசார்யனுக்கு இருக்கவேண்டிய ஔதார்யமும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணங்களும் கால வைஷம்யத்தால் இறுகிப்போய் "வித்யாமதோ தனமத: த்ருதீயோபிஜநோமத:" என்றபடி அஹம்பாவம் மேலிட்டு விட்டால், அவர்களைச் சிஷ்யர்கள் ஆதரிக்கக்கட வரல்லவர் என்பது திண்ணம். இப்படிப்பட்ட விபரீதம் நிகழ்ந்த த்வாபரயுக முடிவில் (கலியுக ஆரம்பத்தில்) பூதத்தார் என்ற ஒரு விஷ்ணு பக்தர்

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்."

என்று இளகிய மனத்துடன் அஜ்ஞாந விருளைப் போக்கி நின்ற மையால் ஸாத்விக மதம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த அன்பும் இன்புருகு சிந்தையும் இக்காலத்து ஆசார்யர்களுக்கு இருந்தால் சிஷ்யர்கள் அவர்களைத் தாங்கி நிற்பது திண்ணம். அவை இல்லா விட்டால் ஆசார்யர்கள் தங்களையும் தங்கள் புத்தகச் சுமையையும் தாங்களே தாங்கிக்கொள்ள வேண்டியவர்கள் தாம்.

"தெய்வம் வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்க மாட்டான்" என்னும் பழமொழிப்படி, பகவானே இக்காலக் கொடுமையைத் தவிர்க்கத் தன்னை எல்லோருக்குந் தெரியும்படி வெளிப்படுத்திக் காட்ட எண்ணங் கொண்டாலும், பண்டிதர்களும் ஆசார்யர்களும் குறுக்கே நின்று அவனை அசிஷ்ட பரிக்ரகமாக விடாமல் காப்பாற்ற முயல்வார்கள் போலும்! அவர்களுடைய தயை அப்படி இறுகிப் போகுங் காலம் நேர்ந்ததாயின் அவர்கள் தாம் யாது செய்வார்?

"அருடரு மடியவர்பான் மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வநாயக நின்
அருளெனுஞ் சிரோ ரவையாரினதென
இருள்செக வெமக்கோ ரின்னொளி விளக்காய்
மணிவரை யன்ன நின்றிரு வுருவில்
அணியம ராக வலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
அன்புட னுன்னோ டவதரித்தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்
தீண்டிய வினைகண் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் றிருவே."

என்று மும்மணிக் கோவையில் ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் புருஷ காரத்வத்தை விளக்கிய ஆசார்யன் செய்யும் புருஷகாரத்வம் இது தானே? அந்தோ! இதுதானே பாகவத ஸம்ப்ரதாயம் இருக்க வேண்டிய ரீதி?

S. கிருஷ்ணமாசாரியர்
(சைதாப்பேட்டை)

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

நமது ஸௌஹ்ருத்துக்களுள் ஒருவரான சித்தூர் ஸ்ரீமாந் வி. துரைஸாமி ஐயங்காரிடமிருந்து கீழ்க் குறிக்கப்பட்டுள்ள நாலு க்ரந்தங்களையும் நாம் வரப் பெற்றோம்.

(1) பகவத் கீதையைப்பற்றிய சில விஷயங்கள்
(2) விசிஷ்டாத்வைதிகளால் அநுஷ்டிக்கப்படும் ஹிந்து மதம்
(3) ஹிந்து தேவாலயங்களும் அவைகளின் ப்ரகாரமும்
(4) திருப்பாவையின் தாத்பர்யம்

இவைகளுள் முதல் மூன்றும் இங்க்லீஷ் பாஷையிலும், நான்காவது தமிழ்ப் பாஷையிலும் இயற்றப்பட்டுள்ளன. இவையெல்லாம், சித்தூரிலுள்ள சில வித்வத் ஸபையின் முன்னிலையில் அந்தந்தக் காலங்களில் ஸ்ரீமான் வி. துரைஸாமி ஐயங்காரால் செய்யப்பட்ட உபந்யாஸங்களின் ஸங்க்ரஹங்களென்று அந்த க்ரந்தங்களின் முகவுரையிலிருந்து நாம் அறிகின்றோம்.

'விசிஷ்டாத்வைதம்' என்னும் க்ரந்தம், விசிஷ்டாத்வைதிகளின் கொள்கைகளென்றும், அவர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள மோக்ஷ மார்க்கமென்றும், விசிஷ்டாத்வைதத்தின் வ்யாபகத் தன்மை என்றும், ஆக மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல் பாகத்தில், தத்வ விஷயமாக விசிஷ்டாத்வைதிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் விஸ்தாரமாக உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பாகத்தில், 'ப்ரபத்தி' என்று சொல்லப்படும் ப்ரஹ்ம வித்யையின் ஸ்வரூபம், அதன் அங்கங்கள், அதைச் சரிவர அநுஷ்டிக்குமவர்களின் லக்ஷணங்கள், இவையெல்லாம் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவதில், விசிஷ்டாத்வைதிகளால் அநுஷ்டிக்கப்பட்டு வரும் ஹிந்து மதத்தின் பெருமையானது சிற்சில அம்சங்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றது. தத்வம் ஹிதம் இந்த இரண்டு அம்சங்களிலும் ஸ்ரீமான் வி. துரைஸாமி ஐயங்கார் விசிஷ்டாத்வைத மதத்தை உள்ளபடி அறிந்து, அப்படி அடையப்பட்ட அறிவின் பரீவாஹமாக அந்த மதத்தின் முக்கியமான விஷயங்களின் விவரணத்தை எவ்வித ப்ரம விப்ரலம்பங்களுமின்றிக்கு வெளியிட்டிருக்கிறார். விஷயங்களின் உபபாதநங்களில் தவறுதல் இராமல் இருப்பதுடன், உபபாதிக்கப்படும் விஷயங்களில் ஹார்த்தமான விச்வாஸமும் அவைகளை வெளியிடுவதில் ஒருவித உத்ஸாஹமும், இவை இரண்டும் கூடியிருப்பது உத்தம க்ரந்தங்களின் லக்ஷணங்களுள் ஒன்று. அந்த லக்ஷணம் ப்ரக்ருத க்ரந்தத்தில் பூர்ணமாகப் பொருந்தி இருப்பதைப் பார்த்து நாம் மிகவும் ஆநந்திக்கிறோம்.

'பகவத் கீதை' என்னும் க்ரந்தத்திலும் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள சிறந்த குணங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இந்த க்ரந்தம் நாலு பாக மாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதல் பாகத்தில் கீதையைப்பற்றிய சில பொது விஷயங்களும், இரண்டாவது பாகத்தில் கீதையில் முக்கியமாகச் சொல்லப்படுவது நிஷ்காமயோக மென்பதும், அந்த யோகத்தின் ஸ்வரூபமும், மூன்றாவது பாகத்தில் யோகத்தின் அங்கங்களாகிற யமம் நியமம் முதலியவை களின் ஸ்வரூபமும், நான்காவது பாகத்தில் பக்தி யோகத்தின் ஸ்வரூபமும் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிலும் ஸ்ரீமான் துரைஸாமி ஐயங் காருக்கு ஸ்வபாவமாயுள்ள தத்வாந்வேஷண விஷயமான வ்யக்ரதை நன்றாக வெளிவருகின்றது.

'ஹிந்து தேவாலயங்கள்' என்னும் க்ரந்தத்தில் ஆலயங்களில் செய்யப் படும் விக்ரஹ ப்ரதிஷ்டை விக்ரஹாராதநம் இவைகளைப்பற்றிய பொது விஷ யங்களுடன்கூட ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுல் அதிஷ்டிதமாயுள்ள திருப்பதியின் மஹி மை நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றது.

'திருப்பாவை' என்னும் க்ரந்தத்தில், ஸ்ரீ ஆண்டாளுடைய திவ்ய ஸூக்திகளில் தமக்குத் தோன்றும் சில ஆச்சர்யகரமான அர்த்தங்களை ஸ்ரீ. துரைஸாமி ஐயங்கார் ஒருவிதமான விநயத்துடன் வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீமாந் துரைஸாமி ஐயங்காருடைய க்யாதியைப்பற்றி நாம் பஹு காலமாகக் கேட்டிருக்கிறோம். இந்த க்ரந்தங்களில் ஆவிஷ்க்ருதமாயிருக்கிற படி அந்த க்யாதியை நாம் இதுவரையில் அறிந்தோம் இல்லை. இப்பொழுது அதை உள்ளபடி அறிந்து மிக்க ஸந்தோஷமடைகின்றோம். அவரால் இயற் றப்பட்டுள்ள இந்த க்ரந்தங்களை எல்லாரும் படித்து ஆநந்திப்பார்களாக.

கூபத்தில் விழும் குழவியுடன் குதித்து அவ்வாபத்தை நீக்கும் அன்னை யைப்போல், சேதநர் பாபிகளாய்ப் பிறவா நின்றால் இவர்களை உத்தரிப்பிக்கப் பகவான் தான் அவதரிக்கும். ஆனல் அநேகாவதாரம் செய்கைக்குக் கருத் தென் என்னில்: சேதநனுடைய தீவினை அளவு பட்டிருக்கும், ஈச்வரனுடைய க்ருபை அளவில்லாம லிருக்கும்.

கொ. ஸுதர்சநாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்.

நாம் செய்ய வேண்டும் காரியம்.

சற்றேறக்குறைய நூற்றைம்பது வர்ஷ காலங்களாக, கிரிஸ்து வரான பாதிரிமார்கள் நமது தேசத்தில் பரவி வருகின்றார்கள். அவர்கள் நம்மவரைத் தமது மதத்தில் சேரும்படி செய்வதற்குக் கணக்கற்ற உபாயங்களைக் கைப்பற்றி வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நமது ஜனங்களுக்குள், இங்க்லீஷ் பாஷையைக் கற்றாலொழிய ஜீவனம் கிடைக்கமாட்டாது என்னும் எண்ணம் த்ருடமாக உண்டாகி விட்டது. இந்த எண்ணத்தை ஆதாரமாக அவலம்பித்து, பாதிரிமார்கள் இங்க்லிஷ் கற்பிக்கும் வித்யாசாலைகளை ஏராளமாக ஏற்படுத்தி, அவைகளில் நம்மவர் பஹுவாகச் சேர வேண்டி, வேறு பாடசாலைகளிற் காட்டிலும் சிறந்த பல அநுகூலங்களைத் தமது பாடசாலைகளில் காட்டுகின்றனர். நம்மவர்களும் இந்த அநுகூலங்களால் இழுக்கப்பட்டு, கூட்டம் கூட்டமாக அந்தப் பாடசாலைகளிலேயே போய்ச் சேருகிறார்கள். அவைகளில் ஜ்ஞாநத்தைப் போதிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள உபாத்யாயர்கள் யாவரெனில், நமது மதத்தில் த்வேஷம் கொண்டுள்ள பாதிரிமார்களும் நமது மத வாஸனையைக் கொஞ்சமேனும் பெறாமலிருக்கும் ஐரோப்பியர்களும் அம்மாதிரியான ஐரோப்பியர்களிடம் கல்வி கற்ற இந்தியருமே. இவர்கள் நமது சிறுவர்களுக்கு ஸாமாந்ய கல்வி கற்பிக்கும் ஸமயங்களில் தகுந்த அவகாசங்களை ஏற்படுத்திக்கொண்டு, நம்முடைய பூர்வ வித்யைகளையும் அநுஷ்டாநங்களையும் எப்பொழுதும் நிந்தித்து வருவதிலேயே உத்ஸாஹமுள்ளவர்களா யிருக்கிறபடியால், அவரிடம் படிக்கும் நமது சிறுவர்கள் மோஹத்தை அடைய இடமுண்டாகின்றது. இதனால், நம்மவர்க்குள் பல துராசாரங்களும் குவாஸனைகளும்

குதர்க்கங்களும் பெரியோரிடம் நிந்தையும் ஸநாதந தர்மங்களில் த்வேஷமும் நமது மதத்தில் விச்வாஸக் குறைவும் மநஸ்ஸிலும் வார்த்தைகளிலும் நடவடிக்கைகளிலும் அநுஷ்டாந பேதங்களும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன.

“𑌅𑌹𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍃𑌣𑍋𑌮𑌿
𑌗𑌵𑌾𑌶𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸 𑌵𑌚𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍇𑌤 𑌦𑍍𑌭𑌵𑌤𑌾𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂
𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌜𑌾 𑌦𑍋𑌷𑌗𑍁𑌣𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥”

என்கிறபடி, பால்யத்தில் ஏற்படும் சேர்க்கைக்கு அநுரூபமாகவே குணதோஷங்கள் ஏற்படுமென்றே? கிரிஸ்து படிப்பும், பாதிரிமார் களுடைய முயற்சிகளும், நம்முடைய ஔதாஸீந்யமும், இங்கிலிஷ் படித்திருக்கும் நம்மவர்களுடைய நடவடிக்கைகளும், இவையெல் லாம் நம்மை எவ்விடம் கொண்டுபோய்ச் சேர்க்கப் போகின்ற னவோ தெரியவில்லை.

இந்த ஆபத்திற்கு ப்ரதீகார மென்ன? நம்மவர்களால் இப்பொ ழுது பலவிடங்களில் கூட்டப்படும் ஸநாதந தர்ம ஸங்கங்களும், அந்த ஸங்கங்களிற் செய்யப்படும் தர்ம ஸம்பத்தங்களான உபந்யா ஸங்களும் நம்மை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுமோ? இந்த ஸங்கங்களும் உபந்யாஸங்களும் அந்தந்தக் காலங்களில் மாத்திரம் சிற்சிலருக்கு ஒருவித உத்ஸாஹத்தை உண்டுபண்ணக் கூடியவை களே தவிர, நமது ஆபத்திற்கு மூலகாரணமாயுள்ள விஷத்தைப் போக் கடிக்கக்கூடிய ப்ரதீகாரங்க ளாகமாட்டா. நூற்றைம்பது வர்ஷகால ப்ரயத்நத்தால் நமக்கு நேர்ந்திருக்கும் இந்த ரோகம், அதற்குச் சற் றேறக்குறைய ஸம கால முயற்சியாலேயே நிவ்ருத்திக்கப்பட வேண் டும். இந்தப் பாதிரிகள் எந்த உபாயத்தைக் கைப்பற்றி நமக்கு இந் தத் தீமையை விளைவித்திருக்கிறார்களோ, அந்த உபாயத்தைக் கைப்பற்றியே நாமும் அதை நிவ்ருத்தித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அது வேரறுக்கப்பட்டு ஆத்யந்திகமாக நாச மடையும். அதற்கு மார்க்கம் எதுவென்றால்:—நமது பாலர்களுடைய சிக்ஷையையும் அவர்களுக்கு ஸாமாந்ய வித்யை போதிப்பதையும் நம்முடைய கையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது தான். பாதிரிமார்கள் பாடசாலைகளை ஏற்பாடு செய்வது போல நாமும் பலமான பாடசாலைகளை ஏற்படுத்தல் வேண்டும். அவர்கள் தமது மதத்தையும் அதைச் சேர்ந்த அநுஷ்டாநங்களையும் வற்புறுத்தும் யோக்யதையுள்ள உபாத்யாயர்களை வித்யா போதநத்திற்காக நியு

மிப்பது போல, நாமும் நம்முடைய மதத்தில் விச்வாஸமுடையவ ராயும் நம்முடைய தர்மாநுஷ்டாநங்களில் அபிநிவேச முடையவராயு மிருக்கும் உபாத்யாயர்களைக் கொண்டு வித்யா ப்ரசாரத்தை நடப் பித்தல் வேண்டும். அவர்கள் தமது பாடசாலைகளில் படிக்க வரும் சிறுவர்களுக்குப் போஜந சாலைகளையும் வைத்திய சாலைகளையும் விளையாட்டுச் சாலைகளையும் ஏற்படுத்துவது போல, நாமும் போஜந சாலை முதலியவைகளை ஏற்படுத்தி, அவைகளில் சுசியும் ஸாத் விகமுமான அந்நம் முதலியவைகளைச் செய்து, அதைக் கொண்டு நமது வித்யார்த்திகளுக்குப் போஜந ஸௌகர்யம் முதலியவைகளைச் செய்தல் வேண்டும். இப்படி ஒவ்வொரு க்ரமத்திலும் நாம் நமது பாலர்களை வேறு மதஸ்தர்களுடைய ஸஹவாஸத்திற்கு விட்டு விடா மல் நம்முடைய ஸநாதந தர்மத்திற்கு ஒத்திருக்கும் நடவடிக்கை களில் பரிசயப்படுத்தி ஸத் ஸஹவாஸத்தையும் அவர்களுக்கு நாம் ஏற்படுத்திக் கொடுத்தால், இந்த ப்ரயத்நம் வீண் போகாமலே கால க்ரமேண நல்ல பலத்தைக் கொடுக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. சிறு வயதில் ஏற்படும் ஸம்ஸ்காரம் ஒருகாலும் வீண் போக மாட் டாது. ஆயிரம் சிறுவர்கள் விஷயத்தில் நாம் இம்மாதிரி பரிச்ரமப் பட்டால், அவர்களுள் ஐந்நூறு பெயர்களாவது நமது தர்மத்தைப் பாதுகாப்பவர்களாகப் பரிணமிப்பார்கள். பலன் உடனே கிடைக்க மாட்டாது என்பது உண்மையே; ஆனால் காலக்ரமேண நிச்சயமாக வும் அநுரூபமாகவும் கிடைக்கும். இப்பொழுது பெரு வெள்ளம் போல நமது தர்மங்களையெல்லாம் வாரிக் கொண்டு போகும் இந்த மேல் நாட்டு நாகரிக ப்ரவாஹத்திலிருந்து நம்மைத் தப்புவித்துக் கொள்வதற்கு இது தான் சரியான உபாயம். பஹுஜந ஸாத்யமா யும் பஹுத்ரவ்ய ஸாத்யமாயும் சிரகால ஸாத்யமாயுமுள்ள இந்த உபாயத்தைச் சரிவரச் செய்வதற்கு யார் முன்வரப் போகிறார்களோ தெரியவில்லை. பகவதிச்சையே ப்ரமாணம்.

* * * *

சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்.

நமது தர்ம சாஸ்த்ரங்கள் மீது வெறுப்புக் கொண்டிருக்கும் ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள், நமது மஹர்ஷிக ளால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நடை யாடும் வரையில் நமக்கு எவ்வித க்ஷேமமும் கிடைக்கமாட்டாது என்று ப்ரமம் கொண்டு அந்தக் கட்டுப்பாடுகளை அழிக்க ப்ரயத்நப்படுகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அவர்களுக்கு அம்மாதிரி ப்ரமம் நேர்ந்திருப்பதைப் பற்றி நாம் சோகிக்கவில்லை; தாம் ஸம்பந்தப்

பட்டவரையில் அவர்கள் அந்தக் கட்டுப்பாடுகளை மீறி நடப்பதிலும் நமக்கு வருத்தமில்லை. அந்தக் கட்டுப்பாடுகளை ச்ரேயஸ்கரங்களென்று நம்பி அவைகளுக்கு உட்பட்டு நடக்க முயலும் ஆஸ்திகர்களை அவர்கள் துராக்ரமமாக நிர்ப்பந்தித்து அவர்களுடைய நம்பிக்கைக்கு ஒத்து நடக்கவொட்டாமல் தடுக்க ப்ரயத்நப்படுகிறார்களே என்று மாத்திரம் நாம் மிகவும் வருந்துகின்றோம். ஏனென்றால், ஒருவனை அவனுடைய மநஸ் ஸாக்ஷ்யத்திற்கு விருத்தமாக நடக்கும்படி நிர்ப்பந்திப்பது பெருத்த அபந்யாயமன்றோ?

கொஞ்சகாலமாக இந்தச் சீர்திருத்தக்காரர்கள், தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு ராஜாங்கத்தாருடைய ஸஹாயத்தைக் கோரி வருகிறார்கள் என்பதை நமது ஸுஹ்ருத்துக்கள் கவனித்திருக்கலாம். காலத்தின் கொடுமையால், ராஜாங்கத்தாரும் அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கிச் சிற்சில சட்டங்களையும் ஏற்படுத்திவிட்டார்கள். சாஸ்த்ர விதிகளுக்குப் பயந்து கந்யகைகளைச் சிறு வயதிலேயே விவாஹம் செய்துகொடுக்கும் மாதா பிதாக்கள், ராஜ தண்டனை அடைந்து வருவது ப்ரதிதிநம் நடக்கும் கார்யமாகிவிட்டது. இன்னும் ஸ்வல்ப காலத்தில் ஸ்நாந ஸந்தி செய்வதும் சிகை யஜ்ஞோபவீதம் தரிப்பதும் குற்றங்களாகிவிடலாம். பூர்வ காலங்களில் சில அரசர்கள் ப்ரஜைகளை இம்மாதிரி வருத்தினபொழுது, அந்த ப்ரஜைகள்

“தே வீஹிதா நிவிவிஶு: கௌரவாம்வாயுகேகயாந்”

என்கிறபடி தமது வீடு வாசல்களை விட்டுவிட்டுத் தேசாந்தரம் ஓடி ஜீவித்து வந்தார்கள். அம்மாதிரி இக்காலத்தில் நாம் அடைவதற்குரிய தேசாந்தரங்களும் இல்லை. என் செய்யலாம்! இப்படிப்பட்ட ஸங்கடத்தை ஆலோசிக்கும் நமக்கு, இந்தச் சீர்திருத்தக்காரர்களிடம் ஸாந்த்வ பூர்வகமாக ஒரு ந்யாயத்தை எடுத்துப் போதிப்பிக்கலாமோ வென்று மாத்ரம் தோன்றுகின்றது. வரப்போகும் ஆபத்தை, நமது புத்தி பலத்தைக்கொண்டு சக்திக்குத் தகுந்தபடி தடுக்க முயலவேண்டியது நமது தர்மமே ஆகும்.

“யத்யப்யஸௌ ந நிவர்தேத நாபராதோ஽ஸ்தி தேஷு ந:”

அதற்கும் அவர்கள் திரும்பாவிட்டால் நம்மீது குற்றமொன்றும் ஏற்படமாட்டாதன்றோ?

நாம் சொல்லிக்கொள்வதாக உத்தேசிக்கும் ந்யாயம் என்னவென்றால்—‘தர்ம சாஸ்த்ரங்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளை மீறி நடந்துகொண்டே தாம் ஹிந்துக்களாக இருக்கவும் ராஜாங்கத்தார்களைக் கொண்டு ஆசார விஷயச் சட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள

வும் சீர்திருத்தக்காரர்கள் விரும்புகிறார்களேயானால், அவர்கள் செய்யத்தக்க தொன்று உண்டு. அவர்களெல்லாரும் ஒன்றுகூடி ஜாதி விஷயமாயும் தர்மாநுஷ்டாந விஷயமாயும் ஸம்ஸ்காரங்கள் விஷயமாயும் மதக் கொள்கைகள் விஷயமாயும் தங்கள் நிர்ணயங்களை ஒன்றுபடுத்தி, ப்ரஹ்ம ஸமாஜம் ஆர்ய ஸமாஜம் என்னும் கூட்டத்தார்போல ஹிந்துக்களுள் தாமும் ஒரு புது வகுப்பினரென்று சொல்லிக்கொண்டு, பிறகு அந்தப் புது வகுப்பைச் சேர்ந்த தங்கட்காக ராஜாங்கத்தாரை விவாஹம் முதலான விஷயங்களில் சட்டம் கேட்பார்களேயானால், அது ந்யாயத்திற்கு ஒத்திருக்கும்' என்பது தான். அதைவிட்டு, தமது வகுப்பில் சேருவதற்கு மனம் வராமல் வெளியில் ஒதுங்கி நிற்குமவர்களையும் நிர்ப்பந்திக்க முயல்வது மிகவும் ந்யாய விருத்தமேயாகும். இது நமது சீர்திருத்தக்காரர்களுக்கு ந்யாயமென்று தோன்றுமோ? நமது தர்மங்களையும் ஆசாரங்களையும் மாற்ற விரும்புகிறவர்கள் முக்யமாக இங்கிலீஷ் படித்தவர்களுள் சிலர். அவர் இங்கிலீஷ்காரர்களுடைய ஆசாரங்களை வேண்டுகிறவர்கள்; பெயருக்கு மாத்ரம் ஹிந்துக்களென்று சொல்லிக்கொண்டு நடை உடை பாவனைகளில் இங்க்லீஷ்காரர்களாயிருக்க விருப்பம் கொண்டிருப்பவர்கள். அந்தப் பெயரையும் நம்மையும் அவர்கள் ஆத்யந்திகமாக விட்டொழிந்தால், நமக்கும் நமது ஸநாதந தர்மத்திற்கும் நேரிடப்போலிருக்கும் ஆபத்தும் விட்டொழியுமென்பது திண்ணம்.

* * * * *

ஆதாராதேய பாவம்

இந்த ஸஞ்சிகையில், ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் என்னும் ஒரு ஸ்வாமியால் 'ஆதாராதேயங்கள்' என்னும் தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள வ்யாஸமொன்று ப்ரசுரம் செய்யப்பட்டிருப்பதை நமது ஸுஹ்ருத்துக்கள் பார்க்கலாம். பகவானுக்கும் அவனைத் தவிர்த்த மற்றைச் சேதநாசேதந வஸ்துக்களுக்கும் பரஸ்பரமுள்ள ஆதாராதேய ஸம்பந்தத்தைப்பற்றி, தர்க்கத்தை முன்னிட்டு விசாரிக்கும் நமது ஆசார்யர்களைப்பரிஹஸிப்பதுபோல அவர் எழுதியிருக்கிறார். ஆனால் அவருடைய கருத்து, அப்படி நமது க்ரந்தகர்த்தாக்களையும் ஆசார்யர்களையும் பரிஹஸிக்க வேண்டுமென்பதாக இருக்கமாட்டாது என்று நாம் நினைக்கிறோம். 'பகவானிடத்தில் நாம் செலுத்த வேண்டிய அன்பை வற்புறுத்துவது முக்கியமாக இருக்க, இம்மாதிரியான சுஷ்க தர்க்கத்தில் ஏன் வீண் விசாரம் செய்யவேண்டும்?' என்பதை வெளியிடுவதே அவர் தாத்பர்யமாக இருக்கவேண்டுமென்பது நமது ஊஹம். ஏனென்றால், அவரைப் பஹுகாலமாக நாம் அறி

வோம்; இந்த லோகத்தில் தென்படும் ஸாத்விகர்களுள் அவர் ஒருவர். ஆகையால், ஸாத்விகரல்லாதவர்களுடைய கார்யமாகிற ஆசார்ய நிந்தை அவருடைய மநஸ்ஸில் ப்ரவேசிக்கமாட்டாது. இதுதான் நமது ஊஹத்திற்கு ஹேது. இருந்தபோதிலும் இம்மாதிரியான பரிபாடியில் அவர் எழுத ஆரம்பித்தது சோசநீயமே.

உண்மையாகவே நமது ஆசார்யர்களால் செய்யப்படும் தர்க்க விசாரமெல்லாம் அநாவசியமே என்று அவர் அபிப்ராயப்பட்டிருப்பாரேயாகில், அவருக்கு நாம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது: 'ஆஸ்திகர்களுள் பல வகுப்பினர் உண்டு. சிலர் தத்வ ஹிதங்களை அநபேக்ஷிதங்களுடைய விரிவின்றிக்கும் அபேக்ஷிதங்களுடைய ஸங்கோசமின்றிக்கும் அறிவதால் த்ருப்தி அடைவார்கள். அவர்களுக்குக் 'பகவான் ஒருவனே ஜகத்துக்கு பிதா அவனே மாதா, அவனைச் சரணமடைவதுதான் நமக்கு ச்ரேயஸ்கரம்' என்னும் உபதேசம் போதும். மற்றும் சில ஆஸ்திகர்கள், சாஸ்த்ர பரிச்ரமத்தில் அதிக்ருதர்களாய், தமக்கு உபயுக்தமான உபதேசம் பெறுவதுடன், தாங்கள் தெளிகைக்காகவும் குதர்க்கங்களாலே கலங்குவாரைத் தெளிவிக்கைக்காகவும் யுக்தி விசாரம் செய்யவும் அபேக்ஷிப்பார்கள். இவர்களையும் த்ருப்தி செய்விக்கவேண்டியது அவசியமாகையால், நமது பெரியோர்கள் தர்க்க விசாரத்தைப் பூர்ணமாகச் செய்யும்படி நேர்கின்றது. ஆகையால் அவர்களுடைய யுக்தி வாதங்களை வீணென்று சொல்வது சரியன்று' என்பதுதான். இந்த அம்சத்தை ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் க்ருபையுடன் கொஞ்சம் கவனித்தல் வேண்டும்.

*   *   *   *   *

ஸ்ரீ வேதாந்த தீபிகை

சென்ற ஸஞ்சிகையில், 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகை மறுபடியும் ஜீவிக்கும்போல் இருக்கின்றது என்றும், அப்படி அது ஜீவதசையை அடையும் பக்ஷத்தில் ஸ்ரீ வைதிக மத தீபிகை ஸ்ரீ வேதாந்த தீபிகையாக மாறிவிடுமென்றும் நாம் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு விஜ்ஞாபித்துக்கொண்டிருந்தோம். நாம் அம்மாதிரி விஜ்ஞாபிததுக்கொணடு சற்றேறக்குறைய ஒரு மாஸகாலமாகியும், இன்னும் ஸ்ரீ வேதாந்த தீபிகைக்கு உயிர் வந்ததான அடையாளமொன்றும் வெளி வரவில்லை. ஆகையால், ஸ்ரீ வைதிக மத தீபிகை 'ஸ்ரீ வைதிக மத தீபிகை' யாகவே வெளிவருகின்றது. சந்தாதாரர்கள் க்ருபைசெய்து தமது சந்தாவை ஸ்ரீ வைதிக மத தீபிகை மானேஜருடைய விலாஸத்திற்கே அனுப்பவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றோம். நமது ஸுஹ்ருத்துக்களெல்லாரும் ஸ்ரீ வைதிக மத தீபிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்வதுடன் தமது சந்தாவையும் அதிக விளம்பமின்றிக்கு அனுப்பினால் அது மிகவும் உபகாரமாயிருக்கும் என்பதையும் விண்ணப்பம் செய்துகொள்கின்றோம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

சரத் ருது துலாமீ] ஸ்ரீமுக ஸூ ஐப்பசி மீ [தக்ஷிணாயநம்

(1933 அக்டோபர்—நவம்பர்)

இ	த				யோகம் யோகினி		
17	1	செ	த்ர. 18–37	உத். 35–3	அ. வி. ஈ. ஆ.	சதுர் திதி	விஷு துலா தர்ப்பணம்
18	2	பு	சது 16–52	ஹ. 34–38	ம. வி. ஆ பா.	அமா ,,	உதயம்முன் தீபாவளி
19	3	வி	அ. 14–1	சி. 33–10	வி. அ. பா.கி.	ப்ரதமா ,,	இஷ்டி கேதார வ்ரதம்
20	4	வெ	ப்ர. 10–13	ஸ். 30–48	வி. வி கி.வ.	த்விதீயா ,,	
21	5	ச	த்வி 5–31	வி. 27–38	வி. வி. வ.அ.	த்ருதீயா ,,	
22	6	ஞா	த்ரு. 0–20 சது.54–20	அ. 24–3	ம. ம. அ.நி.தே.	சதுர் ,,	கரிநாள்
23	7	தி	பஞ்.48–49	கே. 20–7	வி. வி. தே.மே.	பஞ் ,,	
24	8	செ	ஷ. 42–57	மூ. 16–3	அ. வி. மே. வா	ஷஷ் ,,	மணவாளமாமுனிகள் திரு. ந.
25	9	பு	ஸ. 37–13	பூ. 12–3	அ. அ. வா. ஈ.	ஸப் ,,	
26	10	வி	அ. 31–49	உத். 8–15	ம. வி ஈ. ஆ.	அஷ் ,,	பொய்கை, பிள்ளைலோ.
27	11	வெ	ந. 26–57	ச்ர. 4–54	ம. வி. ஆ. பா.	நவ ,,	பூதத்தாழ்வார் திரு. ந.
28	12	ச	த. 22–42	அ. 2–5	வி. அ. பா. கி.	தச ,,	பேயாழ்வார் திரு ந.
29	13	ஞா	ஏ. 19–26	ச. 0–12 பூ. 59–7	வி வி. அ. கி. வ.	ஏ.த்வா ,,	ஏகாதசி வ்ரதம். உத்தாந ஏகாதசி.
30	14	தி	து. 17–10	உ. 59–31	வி. வி. வ. அ.	த்ர ,,	
31	15	செ	த்ர.16_10	ரே. 60–0	வி. வி. அ. நி.	சது ,,	
1	16	பு	ச. 16–28	ரே. 0–59	ம. ம. நி. தெ.	பூர் ,,	
2	17	வி	பூ. 18–3	அ. 3–43	அ. வி. தெ. மே.	ப்ர ,,	
3	18	வெ	ப்ர. 20–52	ப. 7–40	வி. வி. மே. வா.	அ திதி	இஷ்டி
4	19	ச	த்வி.24–44	க்ரு.12–40	அ. அ. வா. ஈ.	த்வி. திதி	
5	20	ஞா	த்ரு.29–16	ரோ.18–20	வி. வி. ஈ. ஆ.	த்ரு ,,	கரிநாள்
6	21	தி	சது.34–26	ம்ரு.24–39	அ. வி. ஆ. பா.	சது ,,	
7	22	செ	பஞ்.39–40	திரு 31–5	ம. வி. பா. கி.	பஞ்	
8	23	பு	ஷ. 44–32	புந. 37–13	வி. வி. கி. வ.	ஷஷ் ,,	
9	24	வி	ஸ. 48–53	பூ. 42–48	அ. வி. வ. அ.	ஸப் ,,	
10	25	வெ	அ. 52–6	ஆ. 47–25	ம. ம. அ. நி.	அஷ் ,,	
11	26	ச	ந. 54–14	ம. 51–1	அ. வி. நி. தெ.	நவ ,,	
12	27	ஞா	த 54–57	பூ. 53–13	வி. அ. தெ. மே.	தச ,,	
13	28	தி	ஏ. 54–26	உத்.54–16	வி. வி. மே. வா.	ஏகா ,,	ஏகா. வ்ரதம்.
14	29	செ	த். 52–44	ஹ. 54–9	வி. வி. வா. ஈ.	த்வா ,,	மத்வ ஏகா. வ்ரதம். ஹரிவாஸரம் 9 நாழிகை.
15	30	பு	த்ர.49–59	சி. 52–53	வி. வி. ஈ. ஆ.	த்ர ,,	வ்ருச்சிக ரவி. 51–14.

னவ ஜநார்த்தந இதி ஜநார்த்தநஸ்யைவ ப்ரஹ்மவிஷ்ணுஶிவாதிக்ருத்ஸ்ந ப்ரபஞ்சதாதாத்ம்யமஸ்மிந் ப்ரகரணே விதீயதே । ஜகத்து ஸ இதி பூர்வம் ஸங்க்ஷேபேணோக்தஸ்ய விவரணோதி ।

"ஸ்ரஷ்டா ஸ்ருஜதி ஆத்மாநம் விஷ்ணு: பால்யஞ்ச பாதி ச ।
உபஸம்ஹ்ரியதே சாந்தே ஸம்ஹர்தா ச ஸ்வயம் ப்ரபு: ॥"

விஷ்ணுவுக்கே எவ்விதம் பரத்வம் சொல்லக்கூடும்? என்னும் ஆக்ஷேபம் நிலை பெற மாட்டாது. ஏனென்றால், இந்த ச்லோகத்தில், ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் இவர்கள் முதலான ஸகல ப்ரபஞ்சத்திற்கும் ஜநார்த்தநன் ஒருவனுடைய தாதாத்ம்யமே சொல்லப்படுகின்றது. ஸகல ப்ரபஞ்சமும் ஜநார்த்தநன் ஒருவனையே ஆத்மாவாக உடையது என்பதே கருத்து. அப்படி தாதாத்ம்யம் சொல்லவேண்டுவது இந்த ப்ரகரணத்தில் அபேக்ஷிதமே; ஏனென்றால் "ஜகத்து ஸ:" [ஜகத் முழுவதும் அவனே] என்று பூர்வம் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? பூர்வம் ஸங்க்ரஹமாகச் சொல்லப்பட்டதை "ஸ்ரஷ்டா" இத்யாதியான ச்லோகத்தால் விவரிக்கிறார். இந்த ச்லோகத்தில் ஸ்ருஷ்டியைச் செய்யும் ப்ரஹ்மாவையும் ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துக்களையும், ஸம்

பது பொருள். ஆகையால், 'ப்ரபஞ்சம் முழுவதற்கும் அவன் ஆத்மாவாக இருப்பது' என்பது இதன் அர்த்தம். ஆனால், விஷ்ணுவுக்கும் ஜநார்த்தநன் என்பவன் அந்தராத்மாவோ? அவ்விருவர்களும் வெவ்வேறு வ்யக்திகளோ?" என்றால், 'அப்படி இல்லை; ஜநார்த்தநன் என்பவனே விஷ்ணு; இரண்டும் பர்யாய சப்தங்களாகையால்' என்பது அதற்கு ஸமாதாநம். இது பின்வரும் 'ஸ்ரஷ்டா' இத்யாதி ச்லோகத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'விஷ்ணு:' என்னும் சப்தத்தால் விளங்கும். முன் ச்லோகத்தில் 'ஜநார்த்தநன் இம்மாதிரி பெயர்களை அடைகிறான்' என்றும், பின் ச்லோகத்தில் 'விஷ்ணுவே ப்ரஹ்மாவாக இருந்துகொண்டு ஸ்ருஷ்டிக்கிறான்; ருத்ரனாக இருந்துகொண்டு ஸம்ஹரிக்கிறான்' என்றும் சொல்வது இவ்விரண்டு சப்தங்களின் பர்யாயத் தன்மையை விளக்கின்றதன்றோ?

ஸ்ரஷ்டா-இந்த ச்லோகத்தின் அந்வயம்:— விஷ்ணு: ஸ்ரஷ்டா ஸந் ஆத்மாநம் [ஸ்ருஜ்யம்] ஸ்ருஜதி; விஷ்ணு: [பாலக: ஸந்] ஆத்மாநம் பால்யஞ்ச பாதி; விஷ்ணு: ஸம்ஹர்தா ஸந் [ஆத்மாநம்] ஸம்ஹார்யஞ்ச ஸம்ஹரதி। இது தான் இவ்விடத்தில் விவக்ஷிதம் என்பது, பின் கூறப்படும் 'ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்ககர்த்தா' இத்யாதியான ச்லோகத்தால் விளங்கும். 'ஸ்ருஷ்டிக்கும் ப்ரஹ்மா, ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்து, ஸம்ஹரிக்கும் ருத்ரன், ஸம்ஹரிக்கப்படும் வஸ்து, இவையெல்லாம் விஷ்ணுவே' என்று ஒரே வாக்யத்தில் சொல்லப்படுகிறபடியால், விஷ்ணுவாக இருக்கும் அம்சத்தில் [அதாவது-விஷ்ணுவை அந்தராத்மாவாக உடையவைகளாகவும் ஆகையால் அவனுடைய விபூதிகளாகவும் இருக்கும் அம்சத்தில்] இவர்களுள் எவ்வித விசேஷமும் இல்லை; ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துக்களைப்போல ஸ்ருஷ்டிக்கும் ப்ரஹ்மாவும் விஷ்ணுவின் விபூதிக்குள் அகப்பட்டவனே என்பது ஸ்பஷ்டம். 'விஷ்ணு

இதி ஸ்ருஷ்டேரேவாவஸ்தி₂தம் ப்₃ரஹ்மாணம் ருத்₃ரம் ச, ஸம்ஹர்தாரம் ஸம்ஹார்யம் ச ஸமபி₄வ்யாஹ்ருத்ய ஸர்வஸ்ய விஷ்ணுதாதா₃த்ம்யோபதே₃ஶாத் । ஸ்ருஜ்யஸம்ஹார்யபூ₄தவஸ்தூந: ஸ்ரஷ்ட்ருஸம்ஹர்த்ரோ: ஜநார்த₃நவிபூ₄தித்வே ந விஶேஷோ த்₃ருஶ்யதே । ஜநார்த₃நவிஷ்ணுஶப்₃த₃யோ: பர்யாயத்வேந ‘ப்₃ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்’ இதி விபூ₄திஷ்வேவ ஸ்வேச்ச₂யா ஸ்வலீலயா விபூ₄த்யந்தர்பா₄வ உச்யதே । யதை₂வாநந்தரமேவோச்யதே ।

“ ப்ருதி₂வ்யாபஸ்ததா₂ தேஜோ வாயுராகாஶ ஏவ ச ।
ஸர்வேந்த்₃ரியாந்த:கரணம் புருஷாக்₂யம் ஹி யஜ்ஜக₃த் ॥
ஸ ஏவ ஸர்வபூ₄தாத்மா விஶ்வரூபோ யதோऽவ்யய: ।
ஸர்கா₃தி₃கம் ததோऽஸ்யைவ பூ₄தஸ்த₂முபகாரகம் ॥

ஹாரத்தைச் செய்யும் ருத்ரனையும் ஸம்ஹரிக்கப்படும் வஸ்துக்களையும் சேர்ந்தாற்போல் படித்து அவை எல்லாவற்றுக்கும் விஷ்ணு தாதாத்ம்யம் உபதேசிக்கப்பட்டிருக்கிறபடியால், ‘ஸ்ருஷ்டிக்கப்பட்டும் ஸம்ஹரிக்கப்பட்டும் வரும் வஸ்துக்கள் எப்படி விஷ்ணுவின் விபூதிகளோ அப்படியே ஸ்ருஷ்டியைச் செய்யும் ப்ரஹ்மாவும் ஸம்ஹாரத்தைச் செய்யும் ருத்ரனும் விஷ்ணுவின் விபூதிகளே’ என்பது வ்யக்தமாகின்றது; விஷ்ணுவின் விபூதியாயிருக்கும் தன்மையில் இவை இரண்டுக்கும் வாசியில்லை என்பது அர்த்தம். இவ்விதம் ஸகல ப்ரபஞ்சத்தையும் தனது விபூதியாக உடைய விஷ்ணுவே தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே லீலையின் பொருட்டு விஷ்ணுவாகவும் அவதரிக்கிறபடியால், ‘ப்₃ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்’ [ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன்] என்று விஷ்ணுவுக்கும் தனது விபூதிகளுள் அந்தர்ப்பாவம் சொல்லப்படுகின்றது; ஜநார்த்தநன் விஷ்ணு இவை இரண்டும் பர்யாய சப்தங்களல்லவோ? இவ்விதம் எல்லாம் பர ப்ரஹ்மத்தின் விபூதி என்பது அடுத்து வரும் “ப்ருதி₂வ்யாப:” இத்யா

வும், ப்ரஹ்மா ருத்ரர்கள் மாதிரி விபூதிகளுள் ஒருவனோ?’ என்னும் சங்கை எற்கெனவே பரிஹ்ருதம்.

ப்ருதி₂வ்யாப:—பஞ்ச பூதங்கள் ஸகல இந்த்ரியங்கள் ஜீவாத்மா இவையெல்லாம் அடங்கிய இந்த ஜகத், அந்த விஷ்ணுவே. ஏனென்றால் அவன், அவ்யயனாக இருந்தாலும், ஸர்வபூதங்களுக்கும் ஆத்மா, விச்வரூபன். இவ்விடத்தில் ‘விஶ்வரூப:’ என்பதில் ‘ரூப’ என்பதற்கு ‘சரீரம்’ என்பது பொருள். ‘ஸர்வபூ₄தாத்மா’ என்பது இதற்கு ப்ரமாணமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

ஸர்கா₃தி₃கம்— தத:—இவ்விதம் அவன் விச்வரூபனாக இருக்கிறபடியால், **பூ₄தஸ்த₂ம் ஸர்கா₃தி₃கம்**—ஸர்வ ப்ராணிகளிடத்திலும் காணப்படும் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரம், **அஸ்யைவ உபகாரகம்**-பரமாத்மாவினுடைய லீலாரஸத்துக்கு நிஷ்பாதகமாகிறபடியால் அவனுக்கு சேஷபூதமே.

ஸ ஏவ ஸ்ருஜ்ய:—ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துவும் அவனே, ஸ்ருஷ்டிக்கிறவனும் அவனே; ரக்ஷிக்கப்படும் வஸ்துவும் அவனே, ரக்ஷிக்கிறவனும் அவனே

ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச। ப்ரஹ்மாத்யவஸ்தாபிரசேஷமூர்த்திர் விஷ்ணுர்வரிஷ்டோ வரதோ வரேண்ய: ।''

இதி । அத்ர ஸாமாநாதிகரண்யநிர்திஷ்டம் ஹேயஸம்பந்தஞ்சாத்யந்த நிரவத்யஸ்ய நிர்விகாரஸ்ய ஸமஸ்தகல்யாணகுணாத்மகஸ்ய ப்ரஹ்மண: கதமுபபத்யத இத்யாசங்க்ய 'ஸ ஏவ ஸர்வபூதாத்மா விச்வரூபோ யதோऽவ்யய:' இதி வ்யபதேசேனோபபாதயதி । ஸ ஏவ ஸர்வேச்வர: பரப்ரஹ்மபூதோ விஷ்ணுரேவ ஸர்வம் ஜகதிதி ப்ரதிஜ்ஞாய 'ஸர்வபூதாத்மா விச்வரூபோ யதோऽவ்யய:' இதி ஹேதுருக்த: ; யதோऽவ்யயோऽபி ஸர்வபூதாத்மாऽயமாத்மா விச்வரூப இத்யர்த்த: । வக்ஷ்யதி ச 'தத்ஸர்வம்

தியான ச்லோகங்களால் சொல்லப்படுகின்றது. இந்த ச்லோகங்களில், 'ப்ரஹ்மமோ நிர்துஷ்டமானது, விகாரமற்றது, ஸகல கல்யாண குணாத்மகமானது; ப்ரபஞ்சமோ ஹேய குணங்கள் கலந்தது; இவை இரண்டுக்கும் ஸாமாநாதிகரண்யத்தால் நிர்த்தேசிக்கப்படும் தாதாத்ம்யம் எப்படி உபபந்நமாகும்?' என்னும் ஒரு சங்கையைச் செய்து கொண்டு, புராண கர்த்தாவே 'ஸ ஏவ ஸர்வபூதாத்மா விச்வரூபோ யதோऽவ்யய:' என்று உபபாதிக்கிறார். முதல் ச்லோகத்தில், 'ஸர்வேச்வரனாகவும் பரப்ரஹ்மமாகவும் இருக்கும் விஷ்ணுவே ஸகலமான ஜகத்' என்று செய்யப்பட்டுள்ள ப்ரதிஜ்ஞைக்கு இதில் ஹேது சொல்லப்படுகின்றது. 'அவன் விகாரமற்றவனாக இருக்கையிலும், ஸர்வ பூதங்களுக்கும் அவன் ஆத்மாவன்றோ? ப்ரபஞ்சம் முழுவதும் அவன் சரீரமன்றோ?' என்பது இந்த வாக்யத்தின் பொருள். ''தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:'' [அவையெல்லாம் விஷ்ணுவின் சரீரம்] என்று மேலும் சொல்லப்போகிறார். இவ்வளவு சொன்னதன் கருத்து என்னவென்றால்—பர ப்ரஹ்மமா

[ஸம்ஹரிக்கப்படும் வஸ்துவும் அவனே], ஸம்ஹரிக்கிறவனும் அவனே, இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ள ஸாமாநாதிகரண்யம், ப்ரபஞ்சத்துக்கும் ப்ரஹ்மத்துக்குமுள்ள சரீர சரீரிபாவத்தை நிபந்தநமாக உடையது.

ப்ரஹ்மாத்யவஸ்தாபி:— ப்ரஹ்மத்வாத்யவஸ்தாபி: ப்ரஹ்மத்வம் ருத்ரத்வம் என்பவை விஷ்ணுவின் அவஸ்தா பேதங்களே. இந்த அவஸ்தையின் யோகம், தனது சரீரமாயுள்ள சேதநாசேதந வஸ்துக்கள் வழியாக ஏற்படுகின்றது என்பது 'அசேஷமூர்த்தி:' என்பதால் விளங்குகின்றது. வரத:—இஷ்டத்தைக் கொடுக்கிறவன்; ஆகையால் அவனே உபாயம். வரேண்ய:—உபாஸிக்கத் தகுந்தவன்; ஆகையால் உபேயன்; வரிஷ்ட:—எல்லாரையும் காட்டிலும் உயர்ந்தவன்; ஆகையால் உபாஸநத்துக்கு அபேக்ஷிதங்களான குணங்களை உடையவன்.

பூதசரீரயோஸ்து—சரீர கதமான தோஷங்கள் ஆத்மாவுக்கு இராமலிருப்

वै हरये वेधसे नमः' इति । अनेन एतदुक्तं भवति, सर्वावस्थास्ववि-
कारस्य ब्रह्मणो विष्णोः विश्वशरीरतया तादात्म्यमविरुद्धमिति ।
आत्मशरीरयोः स्वभावा व्यवस्थिता एव । एवं भूतस्य
सर्वेश्वरस्य विष्णोः स्वसंकल्पसृष्टनियाम्यकोटिनिविष्टब्र-
ह्मादिदेवतिर्यङ्मनुष्येषु तत्तत्समाश्रयणीयत्वाय स्वेच्छावताराः
प्रदर्शिताः । तच्चैतत् ब्रह्मादीनां कर्मवश्यत्वं भगवतः परब्रह्मभू-
तस्य वासुदेवस्य निखिलजगदुपकाराय स्वेच्छया स्वेनैव
रूपेण देवादिष्ववतार इति षष्ठांशे शुभाश्रयप्रकरणे

கிற விஷ்ணு விகாரமற்றவனாக இருந்தபோதிலும், ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல வஸ்துக்களையும் சரீரமாக அவன் உடைத்தாயிருக்கிறபடியால், அந்த வஸ்துக்களுக்கு அவனுடைய தாதாத்ம்யம் சொல்வது விருத்தமாகமாட்டாது என்பதுதான். ஆத்மாவின் ஸ்வபாவமும் சரீரத்தின் ஸ்வபாவமும் வெவ்வேறன்றோ ?

இப்படிப்பட்ட ஸர்வேச்வரனாயிருக்கும் விஷ்ணு, தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கும் ப்ரபஞ்சத்திற்கு உட்பட்டும் தன்னுடைய நியமநத்திற்குப் பரவசமாகவுமுள்ள தேவ திர்யங் மநுஷ்யர்களுள், அந்த தேவ திர்யங் மனுஷ்யர்கள் தன்னை எளிதில் ஆச்ரயிக்கும் பொருட்டு, தன்னுடைய ஸங்கல்ப மாத்ரத்தாலே அவதரிக்கிறான் என்னும் விஷயம் ஏற்கெனவே உபபாதிக்கப் பட்டிருக்கின்றது. ஸ்ரீ விஷ்ணு புராணம் என்னும் இந்த ப்ரபந்தத்திலும், ஆறுவது அம்சத்தில் சுபாச்ரய ப்ரகரணத்தில், ப்ரஹ்மா முதலானவர்களெல்லாரும் கர்மத்திற்கு வசப்பட்டவர்களென்றும், பரப்ரஹ்மமாயிருக்கும் பகவாந் வாஸுதேவனே வென்றால் தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே தனது ஸ்வரூபத்துடனேயே தேவ திர்யங் மநுஷ்யர்களுள்

பதையும், ஆத்ம கதமான குணங்கள் சரீரத்துக்கு இராமல் இருப்பதையும் எல்லாரும் அங்கீகரித்திருக்கிறார்கள்.

प्रदर्शिताः— இதற்கு முன் "ब्रह्मविष्णुरुद्रेन्द्रादेः सर्वस्य संसारसम्बन्धे" என்னும் வாக்யத்தின் அர்த்தத்தை உபபாதநம் செய்யுமிடத்தில் இந்த விஷயம் விவரிக்கப்பட்டிருக்கின்றது. [278-292-வது பக்கங்களில் இதைக் காண்க]

तच्चैतत्—இந்த ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் இந்த விஷயம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது என்பது விவரிக்கப்படுகின்றது. "**हिरण्यगर्भो भगवान् वासवोऽथ प्रजापतिः**" என்று ஆரம்பித்து "**सूर्यादयो वसवस्तास्ते देवाद्याः कर्मयोनयः**" என்ற முடியும் வாக்யங்களால் ப்ரஹ்மா முதலானவர்களின் கர்மவச்யத்வமும், "**समस्ताः शक्तयश्चैताः**" என்று ஆரம்பித்து "**जगतामुपकाराय न सा कर्मनिमित्तजा**" என்று முடியும் வாக்யங்களால் பரம புருஷனுடைய ஸ்வேச்சாவதாரமும் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ-வஸ்ரூஉ-ரூழ । சுஸ்ய செவாதிர௵வெணாவதாரெஷ்வி ந வ்ராகரதொ செஹ ஊதி உஹாஹாரதெ “ந ஹ௵தஸ஁வஸ஁ஸ்யாநொ செஹொசஸ்ய வரஉாதநஃ” ஊதி வ்ரதிவாதிதஃ । ஶ்ரு-திஶ்வ, “சுஜாயஉாநொ ஃஹ-யா விஜாயதெ”, “தஸ்ய யீராஃ வஸிஜாநநி யொநிழ” ஊதி । கஉ-ஜவஸ்யா

அவதரிக்கிருனென்றும் வ்யக்தமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. இந்தப் பகவாந், தேவர் முதலானவர்களுள் ஒருவனுக அவதரிக்கையில், அவனுடைய தேஹம் அப்ராக்ருதமாகவே இருக்கின்றது என்னும் விஷயம் மஹா பாரதத்தில் “ந ஹ௵தஸ஁வஸ஁ஸ்யாநஃ” இத்யாதியான ச்லோகத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. ச்ருதியும், “சுஜாயஉாநொ ஃஹ-யா விஜாயதெ” என்றும் “தஸ்ய யீராஃ வஸிஜாநநி யொநிழ” என்றும் சொல்லுகின்றது. இந்த வாக்யங்களின் அர்த்தமாவது.—‘கர்மவச்யர்களா யிருக்கும் ப்ரஹ்மா முதலியவர்களுக்கு,

---

சுஸ்ய செவாதிர௵வெண—பகவாந் அவதரிக்கும்பொழுது அவன் எடுத்துக் கொள்ளும் விக்ரஹம் அப்ராக்ருதமான விக்ரஹமே என்பதற்கு ப்ரமாணமாக மஹா பாரத வாக்யம் உரைக்கப்படுகின்றது.

ந ஹ௵தஸ஁வஸ஁ஸ்யாநஃ—ப்ரக்ருதியின் விகாரமாகிற ஐந்து பூதங்களின் சேர்க்கையினுல் ஏற்படாதது பகவானுடைய விக்ரஹம். ‘ஸ஁ஸ்யாநழ’ என்பதற்கு ‘அமைப்பு’ என்பது பொருள்.

சுஜாயஉாநொ ஃஹ-யா விஜாயதெ—இந்த ச்ருதி வாக்யத்தின் அர்த்தம் மூலக்ரந்தத்திலேயே விவரிக்கப்பட் டிருக்கின்றது. “கஉ-ஜவஸ்யாநாழ” என்பது முதல் “ஶ-ஹெதஉஜந்ாக-வ-ஜஸி” என்பது வரையில் “சுஜாயஉாநஃ” என்னும் பதத்தின் கருத்தும், ‘ஸெஹயா........ஜாயதெ’ என்பதால் “ஃஹ-யா விஜாயதெ” என்பதின் கருத்தும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயமாவது—‘ப்ரஹ்மா முதலியவர்கள் ஜந்மம் எடுப்பதற்குக் காரணம் ஜந்மாந்தர கர்மம், அந்த ஜந்மத்தின் பலம் அந்தக் கர்மத்தின் அநுபவம், அந்த ஜந்மத்தில் ஏற்படும் தேஹம் ப்ராக்ருதமானது; பரம புருஷன் அவதரிப்பதன் காரணம் அவனுடைய இச்சையே, அப்படிப் பிறப்பதன் பலம் ஜகதுபகாரம், அவன் எடுத்துக் கொள்ளும் தேஹம் அப்ராக்ருதமானது’ என்பதுதான்.

தஸ்ய யீராஃ வஸிஜாநநி யொநிழ. இந்த வாக்யத்தில் ‘யொநி’ என்னும் பதத்திற்கு ‘ஜந்மம்’ என்பது பொருள். என்பதை ‘ஃஹ-யா யொநிம்—ஃஹ-விய ஜந’ என்னும் வ்யாக்யாநத்தில் காணலாம். ‘யீராஃ’ என்பதற்கு ‘தைரிய குணத்துடன் கூடினவர்கள்’ என்பது அர்த்த மன்று; ‘யியஉீரயநீதி யீராஃ’ என்று வ்யுத்பத்தி செய்து ‘புத்திமான்களுக்குள் சிறந்தவர்கள் என்று அர்த்தம் கொள்ளவேண்டும் என்பதை ‘யீஉதாஉஜெஸாஃ’ என்பதில் காணலாம்.

நாம் ப்ரஹ்மாதீநாம் நிக்ருஷ்டாநாமபி தத்தத்கர்மாநுகுணப்ரக்ருதிபரிணாம-ரூபபூதஸங்காதஸம்ஸ்தாநவிஶேஷேஷ்வாத்மஶரீரப்ரவேஶ ஏவ ஜந்மா-வர்ஜநீயம்; ஸ்வயம் து ஸர்வேஶ்வர: ஸத்யஸங்கல்போ பகவாநேவம் பூதஶுபேதரஜந்ம ஸ்வகர்மமூலமபி ஸ்வேச்சயா ஸ்வேநைவ நிரதிஶய கல்யாணரூபேணைவாஶேஷஜகதுபகாராய பஹுதா ஜாயதே; தஸ்யைதஸ்ய ஶுபேதரஜந்ம ஸ்வகர்மமூலதோऽபி ஸ்வகல்யாணகுணாந-ந்த்யேந பஹுதா யோநிம் பஹுவிதஜந்ம தீரா: தீமதாமக்ரேஸரா ஜாநந்தீத்யர்த: ।

ததேதந்நிகிலஜகந்நிமித்தோபாதாநபூதாத், 'ஜந்மாத்யஸ்ய யத:' 'ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்' இத்யாதிஸூத்ரை: ப்ரதிபாதிதாத் பரஸ்மாத் ப்ரஹ்மண: பரமபுருஷாதந்யஸ்ய கஸ்யசித்

தம் தம் கர்மங்களுக்குத் தகுந்தபடி ப்ரக்ருதியின் பரிணாமத்தால் ஏற்படும் ஐந்து பூதங்கள் சேர்ந்துள்ள சரீரங்களுள் ப்ரவேசிப்ப தாகிற பிறப்பு என்பது, தாம் அதை எவ்வளவு வெறுத்தாலும் தம்மால் விடக் கூடாததே; ஸத்யஸங்கல்பனும் ஸர்வேச்வரனு மிருக்கும் பகவான் விஷயத்திலோ வென்றால் அம்மாதிரி அசுபமான பிறப்பு என்பது ஒரு பொழுதும் இல்லை. அப்படி இருக்கையிலும், அவன் ஜகதுபகாரத்தின் பொருட்டு தனது ஸங்கல்ப மாத்ரத்தாலேயே தனது அளவற்ற கல்யாண ஸ்வரூபத்துடனே அநேக ப்ரகாரமாக பிறக்கிறான். அப்படிப்பட்ட அவனுடைய பஹுப்ரகாரமான பிறப்பை, புத்திமான்களுள் சிறந்தவர்கள், அது அசுபமான பிறப்பன்றென்றும் அது கணக்கற்ற கல்யாண குணங்களுடன் கூடிய தென்றும் உள்ளபடி அறிகிறார்கள்'. ஸூத்ரகாரரும், "ஜந்மாத்யஸ்ய யத:" "ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்" இவை முதலிய ஸூத்ரங்களால், பரப்ரஹ்ம மாகிற ப்ரமபுருஷனே ஸகலமான ஜகத்துக்கும் நிமித்த காரணமாயும் உபாதாந காரணமாயும் இருக்கிறான் என்பதை ப்ரதிபாதித்துவிட்டு, அந்தப் பரம புருஷனைக் காட்டிலும் உயர்ந்த வேறொரு பரவஸ்து உண்டோ வென்று "பரமத: ஸேதூந்மாந"

இந்த அர்த்தத்தை "தீரஸ்தத்ர ந முஹ்யதி" [II. 13] என்னும் பகவத் கீதா வாக்யத்திலும் காணலாம்.

ததேதத்—ஒருகால், 'இப்படி ஜகத் முழுவதற்கும் நிமித்த காரணமாயும் உபாதாந காரணமாயும் இருக்கும் பரம புருஷனைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு வஸ்து பரதரமான ப்ராப்ய வஸ்து' என்று ஒரு சங்கை ஜநிக்குமோ வென்று ஆக்ஷேபித்துக் கொண்டு, அம்மாதிரியான சங்கையை ஸூத்ரகாரரே நிராகரித்திருக்கிறார் என்று உபபாதநம் செய்யப்படுகின்றது. "ஜந்மாத்யஸ்ய யத:" என்னும் ஸூத்ரமும் "ப்ரக்ருதிஶ்ச" இத்தியாதியான ஸூத்ரமும் பூர்வமே விவரிக்கப்பட் டிருக்கின்றன. [313-வது பக்கத்தைப் பார்க்க]. மற்றை ஸூத்ரங்களின் அர்த்தம் ஸங்க்ரஹமாக எழுதப்படுகின்றது.

பரதரத்வம் 'பரமத: ஸேதூந்மாநஸம்பந்தபேதவ்யபதேசேப்ய:' [ப்ர. ஸூ. III 2-30] இத்யாசங்க்ய, 'ஸாமாந்யாத்து' [ப்ர. ஸூ. III 2-31 'புத்த்யர்த்த: பாதவத்' [ப்ர. ஸூ. III 2-32] 'ஸ்தாந விசேஷாத் ப்ரகா

இத்யாதி ஸூத்ரத்தால் ஆக்ஷேபித்துக்கொண்டு, "ஸாமாந்யாத்து" இத்யாதியான ஆறு ஸூத்ரங்களால் அந்த ஆக்ஷேபத்தை தாமே நிராகரித்திருக்கிறார். மநு ஸ்ம்ருதி

பரமத:....இந்த ஸூத்ரத்தின் பொருள் :—'ஸேது வ்யபதேசம் உந்மாந வ்யபதேசம் ஸம்பந்த வ்யபதேசம் பேத வ்யபதேசம் இம்மாதிரியான வ்யபதேசங்கள் பரம புருஷனைக் குறித்து ச்ருதியில் செய்யப்பட்டிருக்கிறபடியால், இந்தப் பரம புருஷனைக் காட்டிலும் பரமாயும் ப்ராப்யமாயுமுள்ள வேறொரு வஸ்து உண்டு என்பது ஏற்படுகின்றது' என்பதுதான். இது பூர்வ பக்ஷ ஸூத்ரம். "அத ய ஆத்மா ஸ ஸேது:" [இந்த ஆத்மா வென்னும் வஸ்து ஸேது] என்னும் ச்ருதிவாக்யம் பரமாத்மாவுக்கு ஸேது வ்யபதேசத்தைச் செய்கின்றது. 'ஸேது' என்பதற்கு 'அணை' என்பது பொருளானதால், அணையைக் கொண்டு நாம் அக்கரையை அடைவது போல இந்தப் பரமாத்மாவைக் கொண்டு மற்றொரு ப்ராப்ய வஸ்துவை நாம் அடைய வேண்டும் என்பதே இந்த ச்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் என்பது பூர்வபக்ஷியின் வாதம். இம்மாதிரியே மற்றை ஹேதுக்களையும் கண்டு கொள்ளலாம்.

ஸாமாந்யாத்து—இப்படிச் சொல்வது யுக்தமன்று; ஏனென்றால் பரப்ரஹ்மத்தினிடத்தில் வ்யபதேசிக்கப்பட்டுள்ள 'ஸேது' என்னும் சப்தத்திற்கு 'மற்றொரு இடத்திற்குக் கொண்டு போய் விடும் அணை' என்பது பொருள் அன்று, 'லோகத்தில் ஒவ்வொரு வஸ்துவின் ஸ்வபாவம் மற்றொரு வஸ்துவின் ஸ்வபாவத்துடன் கலக்காமல் அவை யெல்லாவற்றையும் பாது காக்கும் அணை' என்பதே பொருள் என்று அந்த ச்ருதி வாக்யத்தின் பின் பாதியால் விவரிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? "அத ய ஆத்மா ஸ ஸேதுர் வித்ருதிரேஷாம் லோகாநாமஸம்பேதாய" என்பதன்றோ பூர்ண வாக்யம்?

புத்த்யர்த்த: பாதவத்—பூர்வபக்ஷ ஸூத்ரத்தில் 'உந்மாந வ்யபதேசம்' என்று கூறப்பட்டுள்ள ஹேதுவுக்கு இந்த ஸூத்ரம் ஸமாதாநம். பூர்வ பக்ஷியின் வாதமாவது— "சதுஷ்பாத் ப்ரஹ்ம" [ப்ரஹ்மத்திற்கு நாலு பாதங்கள் உண்டு] என்று ச்ருதி சொல்லுகிற படியால் ப்ரம்ஹமானது ஒரு அவச்சேதத்திற்கு உட்பட்டது என்று ஏற்படுகிறது; இப்படி உந்மிதமான ஒரு வஸ்து ஸேதுவாக வ்யபதேசிக்கப் பட்டால், அநுந்மிதமான [அவச்சேதத்திற்கு உட்படாத] வேறொரு வஸ்து இருக்கின்றது என்பது இதனால் த்யோதிக்கப்பட வில்லையா? என்பது தான். இதற்கு ஸமாதாநம் :— 'புத்த்யர்த்த:' உபாஸநத்தின் பொருட்டு. இப்படி உந்மாந வ்யபதேசம் செய்வதெல்லாம் உபாஸகர்களின் உபாஸநத்தின் பொருட்டே; **பாதவத்**—'வாக்பாத:

𑌶𑌾𑌦𑌿𑌵𑌤𑍍' [ப்ர. ஸூ. III 2-33] '𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚' [ப்ர. ஸூ. III 2-34] '𑌤𑌥𑌾𑌽𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌾𑌤𑍍' [ப்ர. ஸூ. III 2-35] '𑌅𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌤𑍍𑌵𑌮𑌾𑌯𑌾𑌮𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃' [ப்ர. ஸூ. III 2-36] 𑌇𑌤𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵

யிலும் "𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑍋 𑌭𑌾𑌰𑍂𑌪𑌃" இத்யாதியான வாக்யங்களால் 'ப்ரஹ்மாவிற்

𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑌾𑌦𑌃' இத்யாதியான வாக்யத்தில் உபாஸநத்தின் பொருட்டு செய்யப்பட்டுள்ள முதக்வா லிய வ்யபதேசம் போல.

𑌸𑍍𑌥𑌾𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌦𑌿𑌵𑌤𑍍—ப்ரஹ்மம் ஸ்வயம் அநவச்சிந்நமாக இருந்தாலும் ஒரு ஸ்தாந விசேஷத்துடன் ஸம்பந்தத்தால் அவச்சேதிக்கப்பட்டு அநுஸந்தாநம் செய்யப் படுவது யுக்தமே; எவ் விடத்திலும் பரவி இருக்கும் ப்ரகாசம் ஆகாசம் முதலியவைகளை ஜன்னல் குடம் முதலிய ஸ்தாநங்களுடன் ஸம்பந்தத்தால் நாம் அவச்சேதித்து அநுஸந்தாநம் செய்ய வில்லையோ?

𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚—பூர்வபக்ஷ ஸூத்ரத்தில் 'ஸம்பந்த வ்யபதேசம்' என்று கூறப்பட்டுள்ள ஹேதுவுக்கு இந்த ஸூத்ரம் ஸமாதாநம். ச்ருதியில் மற்றோரிடத்தில் "𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃" [இந்த ஆத்மாவானது அம்ருதத்திற்கு ப்ராபகம்] என்று ஆத்மா ப்ராபகமாகவும் மற்றொன்று ப்ராப்ய மாகவும் சொல்லப்பட் டிருக்கிற படியால், இந்த ப்ராப்யப்ராபக ஸம்பந்த வ்யபதேசம் மற்றொன்றின் இருப்பைக் காட்ட வில்லையோ என்பது பூர்வ பக்ஷியின் வாதம். ப்ராப்யமும் ப்ராபகமும் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்னும் நிர்பந்தம் இல்லை; அவை இரண்டும் ஒன்றாகவே இருத்தல் உபபந்நமே என்பது ஸமாதாநம்.

𑌤𑌥𑌾𑌽𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌾𑌤𑍍—இது, 'பேத வ்யபதேசம்' என்னும் ஹேதுவுக்கு ஸமாதாநம். "𑌤𑌤𑍋 𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌮𑍍" "𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌃 𑌪𑌰𑌃" இத்யாதியான வாக்யங்களில், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு பட்டதாக பேத வ்யபதேசம் செய்யப்பட்டு, 'பரமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த மற்றொரு வஸ்து இருக்கின்றது' என்று சொல்லப்பட்டிருக்கின்ற தன்றோ? என்பது ஆக்ஷேபம். இது யுக்தமாக மாட்டாது; ஏனென்றால், அவ்விடத்திலேயே "𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌨𑌾𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑌿" இத்யாதியான வாக்யங்களால் 'அப்படிப்பட்ட உயர்ந்த வஸ்து வேறொன்று இல்லை' என்று ப்ரதிஷேதிக்கப்பட்டிருக்கிற படியால். இந்த வாக்யங்களின் அர்த்தத்தை 296வது பக்கங்களில் காண்க.

𑌅𑌨𑍇𑌨....தவிரவும், இந்த ப்ரஹ்மம் ஸர்வத்தையும் வ்யாபித்து நிற்கின்றது என்பது, "𑌤𑍇𑌨𑍇𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" இத்யாதியாக ஆயாமத்தை [வ்யாப்தியை]க் குறிக்கும் சப்தங்களால் தெரிகின்ற தன்றோ? இப்படி ப்ரஹ்மம் தன்னைத் தவிர்த்த மற்றை ஸகல வஸ்துக்களையும் வ்யாபித்திருக்கின்றது என்பதானது, அந்த ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறொன்று மில்லை என்பதைத் தெளிவிக்கின்ற தாகையால்,

ஸ்ரீ :

சந்தா வரவு

(1–9–33 முதல் 22–9–33 வரையில்)			ரூ.	அ.	ப.
1.	ம-ா-ா-ஸ்ரீ.	எஸ். ஆர். ராமாநுஜம் பிள்ளை, சைதாபேட்டை.	3	0	0
2.	,,	வி. கோபால தேசிகாச்சார்யர், ஷை ...	0	8	0
3.	,,	வி. டி. சடகோப ஐயங்கார், ஸ்ரீரங்கம் ...	3	0	0
4.	,,	வி. ராஜகோபால சர்மா ஷை ...	3	0	0
5.	,,	எம். எஸ். ரகுநாத தாதாசார்யர் ஷை ...	3	0	0
6.	,,	ப. நாராயண ஐயங்கார், விச்வேசபுரம் பங்களூர்.	3	0	0
7.	,,	எஸ். ரங்கநாத ஐயங்கார் கண்டோன்மென்ட், பங்களூர் ...	3	0	0
8.	,,	டி. எம். சிங்காரத்தம்மாள் ,, ...	3	0	0
9.	,,	டி. ஸ்ரீநிவாஸாசார்யர் பழையபேட்டை பங்களூர்	3	0	0
10.	,,	பி. வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர், சென்னை ...	3	0	0
11.	,,	வி. எம். ஸ்ரீநிவாஸாசார்யர் சைனுபெஜார், சென்னை ...	1	0	0
12.	,,	டி. கிருஷ்ணமாசார்யர் ஹைகோர்ட், சென்னை..	3	0	0
13.	,,	பி. எ. ஸ்ரீநிவாசாசார்யர் இருளப்பன் தெரு, சென்னை ...	3	0	0
14.	,,	எஸ். எஸ். முத்துவேல் பிள்ளை, விஸ்வராய நல்லூர் ...	3	0	0
15.	,,	என். ராஜகோபாலாசார்யர், கங்காதரபுரம் ...	3	0	0
16.	,,	டி. கோதண்டராம ஐயங்கார், தஞ்சாவூர் ...	3	0	0
17.	,,	டி. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், சித்தூர் ...	3	0	0
18.	,,	கே. ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், தனுஷ்கோடி ...	3	0	0
19.	,,	டி. ராஜகோபாலன், பல்லாவரம் ...	3	0	0
20.	,,	வி. வி. குப்புஸ்வாமி ஐயங்கார், மதுரை ...	3	0	0

Registered No. M. 2941.

"வைதிக மத தீபிகை"

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை.
வருஷச் சந்தா: ரூ. 3.
தனிப் பிரதி: அணு 5

குறிப்பு

தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களும்; மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாம் "ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், ஸம்பாதகர், வைதிக மத தீபிகை, கோட்னீஸ் கார்டென்ஸ், மாம்பலம், சென்னை" என்ற விலாஸத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:—தேவநாகர எழுத்தில் சுமார் 10,000 பதங்களும் தமிழ் அர்த்தங்களுக்கு அநேக இடங்களில் பகவத்கீதை, உபநிஷத்துக்கள், ஸந்தியா புருஷஸூக்தங்களிலிருந்து உதாரணங்களுடன்	2—8—0
ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:— ஷை நூல் கிரந்தத்தின் மிக விரிவாய் உள்ளது. காலக்ஷேபம் செய்பவர்களுக்காக தர்க்கவியாகரண, உதாரணங்களுடன்	5—0—0
மோக்ஷவழி:—பிரஸ்தானத்ரயம், தமிழ்வேதப் பிரமாணத்துடன்	1—0—0
தசோபநிஷத் தமிழ் மொழி பெயர்ப்பு (அச்சில்)	1—8—0

விலாஸம்:—

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்.

பிரம்ம ஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்

நேமம் கிராமம். திருமழிசை போஸ்ட், வயா பூந்தமல்லி, செங்கற்பட்டு ஜில்லா. புஸ்தகங்கள் சைதாப்பேட்டை ஸத்வித்யா டிபோ மானேஜரிடமும் கிடைக்கும்.

Printed by K. R. Press, and published by R. Varadachariar,
Secretary, Sri Sadvidya Sabha, Saidapet, Madras.